மகாவலியே மாநதியே

மெல்லிசைப் பாடல்கள்

- மலரன்பன் -

மகாவலியே மாநதியே

மெல்லிசைப்பாடல்கள்

மலரன்பன்

MAHAWALIYE MANADIYE
SONGS

Songs by	:	**MALARANBAN** Shanthi Nilaiyam Hospital Junction, North Matale, Kawdupelella.
Published by	:	**Hill Country Publishing House** **P.O.Box: 32, Kandy, Sri Lanka.**
Cover Photo and Designed by	:	**Gunam Designers - Kandy.**
Printed at	:	**Alankar Offset Printing,** 405, Main Street, Matale. Tel : 066-31564
First Edition	:	**05.07.2001**
Price	:	**Rs. 90/=**

மகாவலியே மாநதியே
(மெல்லிசைப்பாடல்கள்)

பாடல்கள்	:	மலரன்பன் சாந்தி நிலையம் ஆஸ்பத்திரி சந்தி, நோர்த்மாத்தளை, கவுடுபெலல்ல.
வெளியீடு	:	மலையக வெளியீட்டகம் த.பெ.இல. 32, கண்டி, இலங்கை.
முன் அட்டை படம் எழுத்தமைப்பு	:	குணம் - கண்டி.
அச்சு பதிப்பு	:	அலங்கார் ஓப்செட் பிரிண்டிங் 405, பிரதான வீதி, மாத்தளை. தொலைபேசி இல: 066-31564
முதற்பதிப்பு	:	05.07.2001
விலை	:	ரூபா. 90/=

பின் அட்டை உருவப்படம் கங்காஸ் பாலா - மாத்தளை.

சமர்ப்பணம்

பாட்டுத்திறத்தாலே
பாமர மக்களின்
நெஞ்சங்களைப்
பாலித்த
மக்கள் கவிஞன்
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்துக்கு

முன்னுரை

இலங்கையில் தமிழிலே மெல்லிசை என்பது தீண்டத்தகாத, தீண்டப்படாத ஒரு பொருளாகவே அறுபதுகள்வரையில் இருந்து வந்தது. காலப்போக்கில் இந்நிலை மெதுமெதுவாக மாற்றம் பெறத் தொடங்கியது. அறுபதுகளில் இலங்கை வானொலியில் இசைவாணராக விளங்கிய மணிபாகவதரால் இலகுபடுத்தப்பட்ட இசைப்பாடல்கள் இசையமைக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்டன. வானொலிக்கு வெளியிலும் கலை நிகழ்ச்சிகள் சிலவற்றில் இலங்கைக் கவிஞர் சிலரின் பாடல்கள் கலைஞர்கள் சிலரால் பயன்படுத்தப்பட்டன. இத்தகைய சில நிகழ்வுகளுக்கு முன்னோடிகளாக பரராஜசிங்கம், குலசீலநாதன், முருகையன் போன்றோர் விளங்கினர். வானொலி இசைச் சித்திரங்கள் சிலவற்றிலும் இலங்கைப் பாடல்கள் சில இசையமைத்து ஒலிபரப்பப்பட்டன. அறுபதுகளின் பிற்பகுதியில் இலங்கை வானொலி வர்த்தக சேவையில் இடம்பெற்ற மலிபன் பாடல்கள் என்னும் நிகழ்ச்சியும் இலங்கையின் மெல்லிசைப் பாடல்கள் வளர்ச்சிக்கு ஓரளவு உறுதுணையாக அமைந்தது. எழுபதுகளின் தொடக்கத்தில் இருந்து இலங்கை வானொலி ஈழத்துப் பாடல்கள் என்ற பெயரில் நிகழ்ச்சியை ஒலிபரப்பி மெல்லிசைப் பாடல் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்து வந்துள்ளளது. இன்று முற்றத்து மல்லிகை போன்ற புதிய பெயர்களில் மெல்லிசைப் பாடல்களை அது ஒலிபரப்பி வருகின்றது. இலங்கை மெல்லிசைப் பாடல்களின் வளர்ச்சிக்கு மூலவிசையாக இலங்கை வானொலியே விளங்கியுள்ளது.

தமிழ் மெல்லிசைப் பாடல்களின் வளர்ச்சிக்கு எஸ்.கே.பரராஜசிங்கம், விவியன் நமசிவாயம், சில்லையூர் செல்வராஜன், சி.வி.ராஜசுந்தரம், குலசீலநாதன், எம்.எஸ். செல்வராஜா போன்றோரின் பங்களிப்புகள் வியந்து குறிப்பிடத்தக்கவை. இவர்களோடு ஆரம்பகட்டத்தில் பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் சி. மௌனகுரு, முருகையன், சண்முகலிங்கன், ஜெயபாலன், நித்தியானந்தன், பத்தினியம்மா போன்றோர் வழங்கிய ஒத்துழைப்பும் கருத்தில் கொள்ளப்படத்தக்கது.

ஈழத்து மெல்லிசை இலங்கை வானொலியில் வளரத்தொடங்கிய ஆரம்பக்கட்டங்களில் முருகையன், மௌனகுரு, சண்முகலிங்கன், ஜெயபாலன், நித்தியானந்தன் முதலியோரின் பாடல்கள் முக்கியத்துவம்பெற்று விளங்கின. ஆர்.முத்துசாமி, எம்.எஸ்.செல்வராஜா, ரொக்சாமி, குலசீலநாதன், பிச்சையப்பா, கண்ணன், நேசம், எம். மோகன்ராஜ், திருமலை பத்மநாதன் போன்றோர் மெல்லிசைப் பாடல்களுக்கு இசை வழங்கினர்.தமிழ்பேசும் ரசிகர்கள் மத்தியில் புதிய மெல்லிசைப் பாடகர், பாடகிகள் அறிமுகமாகினர். பரராஜசிங்கம், குலசீலநாதன், முத்தழகு, பத்மலிங்கம், கலாவவதி சின்னச்சாமி, ஜெகதேவி விக்னேஸ்வரன், சுஜாதா அத்தநாயக்க, சக்திதேவி குருநாதபிள்ளை, முல்லைச் சகோதரிகள், முதலியோர் புகழ்பெற்று விளங்கத்தொடங்கினர். கங்கையாளே

என்றப் பெயரில் இலங்கையின் முதல் தமிழ் மெல்லிசை இசைத்தட்டும் வெளியிடப்பட்டது. இலங்கை மெல்லிசை இயக்கத்தோடு தொடர்பு கொண்ட நா. சண்முகலிங்கன் ஈழத்து மெல்லிசைப் பாடல்களின் வளர்ச்சி பற்றிய குறிப்பிடத்தக்க கட்டுரையொன்றையும் எழுதியுள்ளார்.

இன்றைய நிலையில் இலங்கை மெல்லிசைப் பாடல்கள் பலரதும் வரவேற்பைப் பெற்று வளர்ந்து வருகின்றன.திரைப்படப் பாடல்களையே கேட்டுக் கேட்டுச் செவிகளை பழகிக்கொண்டவர்களால் இலங்கையின் மெல்லிசைப் பாடல்களை ஜீரணிக்கமுடியாத நிலையும் இருந்தே வருகிறது. ஆயினும் இம்மெல்லிசைப் பாடல்களிற் கணிசமானவை கருத்தையும் காதுகளையும் கவர்வனவாகவே உள்ளன. இப்போது வெளிவரும் எத்தனையோ தமிழ்நாட்டு திரைப்படப் பாடல்களைவிட இலங்கை மெல்லிசைப் பாடல்கள் சிறப்பாகவே உள்ளன. புதிய புதிய கவிஞர்கள், இசையமைப்பாளர்கள், பாடகர், பாடகிகள் பெருகிவருகின்றனர். மெல்லிசைப் பாடல்களின் வளர்ப்புப்பண்ணையாக இலங்கைவானொலி விளங்கி வருகின்றது. இவ்வகையில் அருந்ததி ஸ்ரீரங்கநாதன், சந்திரமோகன் போன்றோரின் முயற்சிகள் பாரராட்டத்தக்கவை. தொலைக்காட்சி ஓரளவு மெல்லிசைப் பாடல் வளர்ச்சிக்கு உதவுகின்ற போதிலும் தமிழ் மெல்லிசைத்துறைக்கு அதன் பங்களிப்புப் போதாமலே உள்ளது.

ஒரு குறிப்படத்தக்க வளர்ச்சி வரலாற்றைக்கொண்ட இலங்கைத் தமிழ் மெல்லிசைத்துறையில் தமது கால்களை அகலப் பதித்துக்கொண்டவர்களில் ஒருவராக எழுத்தாளரும் கவிஞருமான மலரன்பன் விளங்குகின்றார். ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைத்துறையில் மலரன்பனுக்கு என்று ஒரு தனியான இடம் உள்ளது. அதே போன்று ஈழத்துத் தமிழ் மெல்லிசைப் பாடல் வளர்ச்சி பற்றிச் சிந்திக்கின்ற எவரும் மலரன்பனின் பெயரைத் தவரவிட முடியாது. அந்த அளவுக்குப் பெயர் குறிப்பிடக்கூடிய ஒரு மெல்லிசைக் கவிஞராக அவர் விளங்குகின்றார். அவரது மெல்லிசைப் பாடல்கள் பேதமற்ற சமதர்மச் சமுதாயத்தையும், ஒற்றுமையுணர்வையும், மலையக மக்களின் உயர்வையும், எதிர்காலம் பற்றிய நம்பிக்கையுணர்வினையும், காதல் உறவையும், பாசப் பிணைப்பினையும், இயற்கையின் எழிலையும், பக்தியுணர்வையும் பேசுகின்றன

இவ்வகையில், மலரன்பனின் மெல்லிசைப் பாடல்களின் தொகுதியொன்று வெளிவருவது மகிழ்ச்சிக்குறியது. முழுக்க முழுக்க தரமான மெல்லிசைப் பாடல் தொகுதியொன்று இலங்கையில் நூல்வடிவில் வெளிவருவது இதுவே முதல் தடவை என்று நினைக்கின்றேன். இத்தொகுதியில் அவரது சிறந்த பாடல்கள் பல இடம்பெற்றிருப்பது மனநிறைவைத் தருகிறது

மலரன்பனின் மெல்லிசைப் பாடல்கள் என்றதும் முதலில நினைவுக்கு வருவது, அவர் எழுதிய

“மூங்கிலின் நாதமும் தென்றலின் கீதமும்
உன் புகழ் பாடுதம்மா - உன்னை
எங்கெங்கு காணினும் சக்தியென்றே - உண்மை
தத்துவம் பேசுதம்மா”

என்றப் பாடலாகும். இத்தொகுதியில் அப்பாடலும் இடம் பெற்றிருப்பது மனமகிழ்ச்சிக்குரியது. மலரன்பனின் இனிய இப்பாடலுக்கு எம்.எஸ். செல்வராஜா அருமையான இசை வழங்க, என். ரகுநாதன் பாடலை அனுபவித்துப் பாடியுள்ளார்.

நூலின் பெயராக அமைந்த “மகாவலியே மாநதியே” எனத் தொடங்கும் பாடலுக்கு எம். மோகன்ராஜ் அற்புதமாக இசையமைத்துள்ளார். கலாவதி சின்னச்சாமி மிக இனிமையாக இப்பாடலைப் பாடியுள்ளார். மகாவலி நதியை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையின் இன ஒற்றுமையை வற்புறுத்தும் அருமையான பாடலாக இது விளங்குகிறது. பாடலில் இருந்து சில வரிகள்:

“மகாவலியே மாநதியே
உலா வருவாய் பேரலையே
உன்பாதம் போகும் உன்பாதை யெங்குமே
உள்ள பாவம் யாவும் கழுவ வேண்டுமே.....

பேதங்கள் இல்லாத காற்று
நேச விதைகளைத் தூவாதோ
நேசம் என்பதே தேசம் எங்குமே
இருவழிப் பாயைின் உறவுகளே
இரண்டு வானம் எங்கும் இல்லையே
இணைந்து வாழ பொங்கும் இன்பமே”

இப்பாடல் சிங்கள எழுத்தாளர் தெனகம சிறிவர்தனவினால் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

போரினால் ஏற்படும் பயங்கர விளைவுகளை நமது நாடு இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கிறது. பாரதிதாசன் “கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்” என்று பாடினார். வேறு பல கவிஞர்களும் போரினால் ஏற்படும் சீரழிவுகளைப் பாடியுள்ளனர். மலரன்பனும்,

“போராலே உலகில் தீராத துயரே
வீணாக விழிநீரும் ஏனோ
ஆராக வழிந்தோடலாமா
ஒருவானம் ஒருபூமி இதுபோல ஓரேநீதி
இருந்தாலே சோகங்கள் ஏனோ
திருந்தாத உள்ளங்கள் ஏனோ”

என்று எல்லோருக்கும் சமநீதி இருக்கும்போதுதான் போர்நிலை ஏற்படாது என்பதையும் பாடலில் விளக்குகிறார்.

“தென்றலுக்கு வேலி இல்லையே
திங்களுக்கு ஏது எல்லையே”

என்று தொடங்கும் பாடல் சரிநிகர் சமானமாக மக்கள் வாழவேண்டும் என்பதை இனிய தொனியில் வற்புறுத்துகின்றது. இன்று சமாதானத்தை விரும்பி வரவேற்கும் பல நல்ல உள்ளங்கள் நமது நாட்டில் உள்ளன. அவற்றில் ஒன்று மலரன்பனின் உள்ளம். சமாதானம் இந் நாட்டில் நிலவவேண்டும் என விரும்பும் அவர்

"வெள்ளைப் புறாவே
புதுச்சேதியின் மடல் ஏந்தியே
விரைந்தே நீ வா வா"

என்றப் பாடலை எழுதியுள்ளார்.

மலையக தேயிலைத் தோட்டங்களில் உழைக்கும் பெண்கள் தங்களது பிள்ளைகளைச் சரியாகக் கவணிக்கமுடியாமல் பிள்ளைமடுவங்களில் விட்டு விட்டு வேலைக்குச் செல்வதும் அப்பிள்ளைகள் வளர்ந்து நல்ல கல்வி பெற்று வாழ்க்கையில் உயர முடியாமற் போகும் நிலையும் நிரோஷா விராஜினி பாடிய

"குறிஞ்சி நிலா வாடுதம்மா பிள்ளைமடுவத்திலே"

என்ற பாடலில் உணர்த்தப்படுகின்றது. பெண் குழந்தையை தூங்க வைக்கும் தாலாட்டுப் பாடலாக இது அமைந்துள்ளது.

நாட்டுப்புறப் பாடல்கள் காலங்காலமாக மக்கள் மனங்களில் நிறைந்து, நிரந்தர இடத்தைப் பெற்று வந்துள்ளன. பல்வேறு கவிஞர்களும் நாட்டுப்புறப் பாடல் மரபைப் பின்பற்றிப் பாடல்கள் எழுதியுள்ளனர். மலரன்பனும் சில மெல்லிசைப் பாடல்களை நாட்டுப்புறப் பாடல்களின் பாணியில் எழுதியுள்ளார். மலையகத் தேயிலைத் தோட்டங்களில் உழைக்கும் தொழிலாளரின் காதல் உறவை நாட்டுப்புறப் பாடல் வடிவிலே அழகுறத் தந்துள்ளார், அவர்

"உச்சிமலைச் சாரலிலே பச்சநெறத் தேரியிலே
நட்டு வச்சி தேயிலயில் தினம் தினமே
கொட்டும்பனி நேரத்திலும் கொழுந்தெடுப்போமே
நாங்க கொழுந்தெடுப்போமே"

என்று தொடங்கும் அப்பாடலை செல்வராஜாவின் இசையில் ரகுநாதனும், ஜெகதேவி விக்னேஸ்வரனும் சிறப்பாகப் பாடியுள்ளனர்.

மலரன்பன் தத்துவப் பாடல்களையும், எதிர்கால நம்பிக்கையுணர்வினைப் பிரதிபலிக்கும் பாடல்களையும் எழுதியுள்ளார். தத்துவப் பாடல்கள் மனிதனின் நிலையில்லா வாழ்வியற் போக்கை உணர்த்த, மற்றையவை எதிர்காலம் பற்றிய நம்பிக்கையுணர்வினை ஊட்டுகின்றன. தாய்-மகள் பாசவுணர்வினைப் பிரதிபலிக்கும் பாடல்களும் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. பல்வேறு முக்கிய தினங்கள் தொடர்பாகவும் மலரன்பன் மெல்லிசைப் பாடல்கள் எழுதியுள்ளார்.

அவரது பாடல்களில் ஆங்காங்கே சிறந்த கற்பனைகளைக் கண்டும் கேட்டும் அனுபவிக்க முடிகிறது. எடுத்துக்காட்டாகப் பின்வருவனவற்றைக் காணலாம்.

காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்ட காதலுறவுப் பாடல்களும் மலரன்பனின் பேனாவிலிருந்து பிறந்துள்ளன.

“மஞ்சள் நிலவு முகிலணிந்து
மண்ணில் உலவ கண்டுகொண்டேன்.” -

“ஒரே ஒரு பார்வையில் மயங்கி
நிலாவினில் தேடுதே மனமே” -

“வானவில் ஒன்று வாவா என்று
கண்களில் பேசுதே” -

“தாழம் பூவே கானம் நீயே
பாடவாராயோ” -

போன்ற பல பாடல்கள் குறிப்பிடதக்கன. ஆணின் காதல் உறவை புலப்படுத்துவனவும் பெண்ணின் இதயத்தை வெளிப்படுத்துவனமாகவும் அமைந்த பல இனிய பாடல்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் சரத் விக்ரமவின் இனிய இசையில்

“உயிரே குயிலே உயிரில் கலந்த உறவே”

என்ற பாடல் என்னை மிகவும் கவர்ந்தது. முத்தழகு பாடலை அனுபவித்துப் பாடியுள்ளார். கேட்கக் கேட்கத் தெவிட்டாத மலரன்பனின் பாடல்களில் இதுவும் ஒன்று.

இயற்கை அழகின் இனிய சித்தரிப்புகளாக அமையும் பாடல்களையும் மலரன்பன் ரசனையுணர்வு பொங்க எழுதியுள்ளார். கவிஞரின் அழகியல் உணர்வை அப்பாடல்களிலே தரிசிக்க முடிகின்றது. அவற்றுள்

“சோலையோரம் மாலைநேரம்
சலசல நதிக்கரையிலே
இனிமையான நினைவு போல
புதுப்புது இசை மனசிலே” -

“இலையுதிர் காலப்பறவைகளே
மழைதரும் மேகம் தெரிகிறதே”

என்ற பாடல்கள் என்னை மிகவும் கவர்ந்தவை. இவை முறையே சரத்விக்ரம இசையில் கலாவதியாலும், சாரங்கன் ஸ்ரீரங்கநாதனின் இசையில் ஜெகதேவியாலும் பாடப்பட்டுள்ளன.

"இயற்கை அன்னையின் மடியினிலே
மயக்கும் பொன்னெழில் ஓவியமே
உழைக்கும் கரங்களின் திறமையிலே
உயர்ந்து வளம் தரும் மலையகமே.....

செல்வம் யாவுமே பொதுவில் மாறவே
தொடரும் துன்பமும் மறைந்திடுமே"

என்று அமைந்துள்ள வரிகள் குறிப்பிடத்தக்கன. எம்.எஸ்.செல்வராஜாவின் இசையமைப்பில் எம்.என். ராஜாவும் ராணி ஜோசப்பும் சுவையாக இப்பாடலைப் பாடியுள்ளனர்.

"மஞ்சள் நிலவு முகிலணிந்து
மண்ணில் உலவ கண்டுகொண்டேன்" -

"பூமேனி சிலையொன்று ஊர்கோலம் போகும்
அது வண்ண மலரென்று மதுவண்டு மோதும்" -

"ஒரு கோடி மின்னல் மெல்ல நடந்துபோகுதே"

இத்தைகைய வரிகள் கவிஞரின் அற்புதமான கற்பனைகள்.

மலரன்பனின் மெல்லிசைப் பாடல்கள் கருத்தாழமும், சுவையுணர்வும் கொண்டவை. அவரது பல பாடல்களையும் திரும்பத் திரும்பக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். அவரது கருத்துகளுக்கும், கற்பனைகளுக்கும் சிறந்த முறையில் இசையமைப்பாளர்கள் இசையமைக்க பாடகர்கள் தமது இனிய குரல்வளத்தால் சுவையூட்டியுள்ளனர். இலங்கையின் மெல்லிசைப் பாடல் வளர்ச்சியின் ஒரு பகுதியை இப்பாடல்கள் இனங்காட்டுகின்றன.

தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக் கழகம்
பேராதனை.

கலாநிதி துரை மனோகரன்
முதுநிலை விரிவுரையாளர்

பதிப்புரை

மலரன்பனின் மெல்லிசைப் பாடல்கள் நூலுருவில் வெளிவரும் வேளையில் நமது நாட்டின் இசைக் கலைஞர்கள் பற்றி சிந்திக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். கலையார்வமும், கலைத்தாகமும் காரணமாக இவர்கள் அற்ப சொற்ப கொடுப்பணவுகளைப் பெற்றுக்கொண்டு இசைத்துறைக்கு ஆற்றியுள்ள பங்களிப்புகள் போற்றத்தக்கவை. தமிழ் நாட்டினைப் போன்று பெரும் முதலீடு செய்து தமிழ்த் திரைப்படம் தயாரிக்கும் நிலை இங்கில்லை. எனவே, இசைத்துறையை மட்டுமே தொழிலாகக் கொள்வது சாத்தியமற்றது. இருந்தும் தென்னிந்தியத் தமிழ்த்திரைப்பட பாடல்களுக்கு நிகரான பல பாடல்களை நமது இசையமைப்பாளர்கள் உருவாக்க பாடகர்கள் பாடியுள்ளனர்.

இத்தகைய பாடல்கள் வெறுமனே காற்றோடு காற்றாக கலந்துவிடாமலிருக்க மலரன்பன் பாடல்கள் ஓர் ஆவணமாக நூலுருவில் வெளிவருகிறது. மலரன்பனின் சிறுகதைகள் எவ்வாறு கவித்துவமுள்ளதாக பேசப்படுகிறதோ அவ்வாறே அவரது மெல்லிசைப்பாடல்களும் பாராட்டப்படுகின்றன. மலையக வெளியீட்டகத்தின் வெளியீடாக 'மகாவலியே மாநதியே' தொகுதியை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியாவில் ஆண்டு தோறும் சிறந்த திரைப்படப் பாடலுக்கு ஜனாதிபதி பரிசுகள் கொடுக்கப்படுவது போல நமது இசையமைப்பாளர்கள், பாடலாசிரியர்கள், பாடகர்கள் ஆண்டுதோறும் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவேண்டும். கலாசார அமைச்சு இதனை கருத்தில் கொள்வது நன்று. இது மேலும் சிறந்த படைப்புகள் உருவாக வழி சமைக்கலாம்.

இந்நூலை அழகுற அச்சிட்ட அலங்கார் ஓப்செட் பிரிண்டர்ஸ் உரிமையாளர்கள் திரு.பி.சந்திரசேகரன், திரு.எஸ்.சிவசங்கர், சிறப்பாக கணனியில் பதிப்பித்த செல்வன் கே.விஜயபாஸ்கர் ஆகியோருக்கு எமது நன்றி.

அந்தனி ஜீவா
பதிப்பாசிரியர்.

என்னுரை

அம்மி கொத்துவதற்கு சிற்பி தேவையில்லை
'நீ உனது
சிறுகதை குறுநாவல் கவிதையென
முத்திரைப் பதித்துவந்த
பாதையில் தொடர்ந்து
தடம் பதிப்பாயாக' என
என் மீது அக்கறையுள்ள இலக்கிய நண்பர்கள்
நான் பாட்டெழுத விழைந்த வேளை
குறிப்பிட்டும்.....
இசையமைப்பாளர்களின் ஆர்மோனியத்தில்
அவர்களின் கைவிரல் இலாவகத்தில் கற்பனையில்
ஏழு ஸ்வரங்களில் எழும் ராகங்களில்
எனது சிறு தாரிகையில்
ஓவியம் வரையும் முயற்சி.....
தமிழ்ச் சினிமா பாடல்களைக்
கேட்ட அருட்டுணர்வின்
வெளிப்பாடல்ல இப்பாடல்கள்.
என் தேச சுவாசக்காற்றும்
மக்களின் மண்வாசனையும்
முற்றத்துப் பூக்களின் மணமும் வீசும்
எனது குயில்தோப்பு இது.

மலரன்பன்.

அசோகவனம்

கடலையே காணாத எங்களுக்கு
ஒரு செல்லப் பெயர்
கள்ளத்தோனிகள்
வாஞ்சையாக சொல்வார்கள்
வடக்கத்தியான்கள்
காலத்தாலும் கரையாத கல்வெட்டுகள்
செத்த பின்பும்
தேயிலை இறப்பர் காடுகளில்
துளிர்க்கும் சுரக்கும்
சீதக்காதி உடம்புகள்
பச்சையாய் நீலமாய்
வேஷம் போட்டுக்கொண்ட
அரங்காடிகளின் நிரந்தர மேடைகள்
நாங்கள்
அகோரப் பசிக்கு
தனது வாலையே விழுங்கும்
பாம்புத் தலைகளுக்கு
வால்கள்
முடிவில்லாத விடுகதைகளில்
வரலாறு படைக்கும்
விக்கிரமாதித்தன்கள் வேதாளங்களுக்கு
சாமரம் வீசும்
பேசாமடந்தை பதுமைகள்
இராவணன்களுக்கு அல்ல
இராமன்களுக்குகே
வைப்பாட்டிகளாகிப் போன
சீதைகள் நாங்கள்

சுபமங்களா நவம்பர் 1995

இசையெனும் நாதம் பொழிகையிலே

இசை : எம்.எஸ். செல்வராஜா
பாடியவர் : ஏ.சாந்தகுமார்

இசையெனும் நாதம் பொழிகையிலே
இதயம் முழுதும் மலர்கிறதே
ஜீவ ஏழு ஸ்வரங்களிலே
கோடி ராகங்கள் பிறக்கின்றதே

தாலாட்டும் தாயும் மடியினிலே
பாலூட்டுவாளே இசையுடனே
ஏரோட்டும் உழவன் வயலினிலே
உடல் நோவும் தீரும் பாட்டினிலே
மரம் கூட இசை கேட்டு வசமாகுமே
அணையாத சுடராகும் சங்கீதமே

நீரோட்டம் போலே மனதினிலே
அலைமோதும் துயரம் மறைந்திடவே
ஏகாந்த இறைவன் அருள்பெறவே
தேனான இசையும் துணைவருமே
காற்றாக எந்நாளும் புவி மீதிலே
அழியாது தினம் வாழும் சங்கீதமே.

மூங்கிலின் நாதமும் தென்றலின் கீதமும்

இசை : எம்.எஸ்.செல்வராஜா
பாடியவர் : என்.ரகுநாதன்

மூங்கிலின் நாதமும் தென்றலின் கீதமும்
உன் புகழ் பாடுதம்மா-உன்னை
எங்கெங்கும் காணினும் சக்தியென்றே உண்மை
தத்துவம் பேசுதம்மா

மலர்களினாலே உனைத் தொழுதேனே
தரிசனம் தாயே தாராயோ
வான்முகில் மேலே முழுமதிபோலே
நேரே வாராயோ
வேதம் போற்றும் அந்த நாதபிரம்மந்தனை
நாளும் தேடினேனே
போதும் போதும் இனி பிறவி போதுமென
பாதம் நாடினேனே
ஆதவன் சிவனே துணை வர உமையே
கண்களினாலே காணேனே

அலைகளைப்போலே தடம் புரண்டோடும்
மனநிலை தானே மாறாதோ
மாதொரு பாகன் துணைவர நானே
உனையே காணேனே
கோடி கோடி முறை தேடி தேடி நின்று
நானும் வாடினேனே
ஆடியாடிவரும் மாசித் தேரில் நின்று
கானம் பாடுவேனே
பரம்பொருள் தேடி மலர்ப்பதம் நாட
மாயைகள் எனதே தீராதோ

மகாவலியே மாநதியே

இசை : எம். மோகன்ராஜ்
பாடியவர் : எஸ். கலாவதி

மகாவலியே மாநதியே
உலாவருவாய் பேரலையே
உன்பாதம் போகும் உன் பாதையெங்குமே
உள்ள பாவம் யாவும் கழுவ வேண்டுமே

பேதங்கள் இல்லாத காற்று
நேச விதைகளைத் தூவாதோ
நேசம் என்பதே தேசம் எங்குமே
இருவழிப் பாதையின் உறவுகளே
இரண்டு வானம் எங்கும் இல்லையே
இணைந்து வாழ பொங்கும் இன்பமே

வேதங்கள் எல்லாமே கூறும்
தூய இதயமே மலராதோ
மேகம் விண்ணிலே கூறும் செய்தியே
இனிவரும் காலங்கள் நலந்தருமே
புரண்டு ஓடும் கங்கை வெள்ளமே
இருண்ட நாளை கொண்டு செல்லுமே

இப்பாடல் பிரபல சிங்கள எழுத்தாளர் தெனகம சிரிவர்தனவினால் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு 27-08-2001 சிலுமின பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.

தென்றலுக்கு வேலி இல்லையே

இசை : எம்.எஸ். செல்வராஜா
பாடியவர் : ஏ. விக்னேஸ்வரன்

தென்றலுக்கு வேலி இல்லையே
திங்களுக்கு ஏது எல்லையே
தேன் மலரும் வான்மழையும்
ஆழ் கடலும் மாநதியும்
பேதங்களைப் பார்ப்பதில்லையே

பாடப் பிறந்த குயிலும்
தோகையிலாடும் மயிலும்
கோடுகள் கீறி தனியே
மேடைகள் தேடி வருமா
விலை பேசியே புகழ் தேடுமா
அதன் சேவையே பொதுவானதே
இது தேவனின் விதியானதே

காலை மலர்ந்த கதிரும்
கோயில் மணியின் ஒலியும்
மாடிகள் மட்டும் வருமா
குடிசையை மறந்து விடுமா
நிறம் யாவுமே அழகானதே
மனவானிலே ஒளிவீசினால்
துயர் யாவுமே பறந்தோடுமே
சமமாகவே புவிவாழுமே

இலையுதிர்காலப் பறவைகளே

இசை : சாரங்கன் ஸ்ரீரங்கநாதன்
பாடியவர் : ஜெகதேவி விக்னேஸ்வரன்

இலையுதிர் காலப்பறவைகளே
மழை தரும் மேகம் தெரிகிறதே
கனி தரும் சோலை மரங்களுமே
துளிர்விடும் நாளும் இனி வருமே
பறவைகளே பறவைகளே
வசந்தம் வருமே விரைவினிலே

கோடை மறையுமே சோலை மலருமே
காயாகி கனியாகி விருந்தாகுமே
மாறாத பிணிதீர மருந்தாகுமே
மழைத்துளியை அலைகடல் வெறுப்பதில்லை
மரக்கிளையில் கொடி படர மறுப்பதில்லை.

கோரம் அழியுமே ஊரும் மகிழுமே
தேனோடு பாலோடி தெருவெங்குமே
தாயோடு சேயாட மனம் பொங்குமே
பனித்திரையும் பகலினில் நிலைப்பதில்லை
ஒரு கரத்தில் ஓசை பிறப்பதில்லை.

உலகெங்கும் நடைபெறும் கொடும் யுத்தங்களினால் தமது முற்றத்து பூக்களும் வீசும் காற்றும் அந்நியமாகிவிட புலம்பெயர்ந்து அகதிகளாக வாடுபவர்களுக்கு அர்ப்பணம்

நம் தேசம் மடியினிலே

இசை : சரத் விக்ரம
பாடியவர் :

நம் தேசம் மடியினிலே
செந்துளிகள் ஏனம்மா
நட்சத்திரப் பூவெல்லாம்
சிதறினதோ பூமியிலே
பால்வண்ண வெண்ணிலவே
எரிமலையாய் ஆனதுவோ

அந்தி சாயும் நேரத்திலே
சிந்து பாடும் குயிலினமே
உங்கள் குரல்வளைகளையே
நெரித்தவரே யார் யாரோ
வங்கக் கடல் பேரலையே
உந்தன் புயல் ஓயாதோ
தென்றலும் வசந்தமும்
அந்நியமாய் போனதேனோ

தேன் சிந்தும் பூவினமே
உங்கள் வண்ண இதழ்களிலே
கொல்லும் விஷத் துளிகளையே
தெளித்தவரே யார் யாரோ
நெஞ்சமெனும் வீணையிலே
அபஸ்வரங்கள் வரலாமோ
கங்கையும் கரை நிழலும்
சொந்தமின்றி போனதேனோ

இயற்கை அன்னையின் மடியினிலே

இசை : எம்.எஸ். செல்வராஜா
பாடியவர்கள் : எம்.என். ராஜா
ராணி ஜோசப்

ஆ. இயற்கை அன்னையின் மடியினிலே
மயக்கும் பொன்னெழில் ஓவியமே
பெ. உழைக்கும் கரங்களின் திறமையிலே
உயர்ந்து வளம் தரும் மலையகமே
இருவர். மலையகமே அழகு மலையகமே
மலையகமே அழகு மலையகமே

பெ. மரகத மேனி மலைகளிலே
அருவிகள் பாயும் அழகினையே
ஆ. விழிபல வேண்டும் ரசிப்பதற்கே
சிறகுகள் வேண்டும் பறப்பதற்கே
பெ. சுவை தரும் தேனீர் உலகினுக்கு
வழங்கும் மக்களின் வாழ்வினிலே
ஆ. தொடரும் சோகமே மறைந்து போகவே
வர்க்க ஒற்றுமை தான் துணையே

ஆ. பனித்துளி தேனாய் பொழிகிறதே
இனிமையில் மனமே நனைகிறதே
பெ. செந்தூரப் பூவின் மரங்களிலே
சந்தனக் காற்று தவழ்கிறதே
ஆ. வறுமைகள் நீங்கியே வாழ்ந்திடவே
இனித்திடும் உன்னத நாள் வருமா
பெ. செல்வம் யாவுமே பொதுவில் மாறவே
தொடரும் துன்பமும் மறைந்திடுமே.

உச்சி மலைச் சாரலிலே

இசை : எம்.எஸ். செல்வராஜா
பாடியவர்கள் : என். ரகுநாதன்
ஜெகதேவி விக்னேஸ்வரன்

ஆ. உச்சிமலைச் சாரலிலே பச்சநெறத் தேரியிலே
நட்டு வச்சி தேயிலையில் தினம் தினமே
கொட்டும் பனிநேரத்திலும் கொழுந்தெடுப்போமே
நாங்கள் கொழுந்தெடுப்போமே.

ஆ. கங்காணி கோட்டுப் போட்டு
வாராரு ரோட்டு மேல
பச்சோந்திப் பேச்சிப் பேசி ஓடியே திரிவார்

பெ. சாந்துப் பொட்டு செண்பகமே
அரும்பெடுக்காதே
கங்காணியும் வெறட்டிப்போட வாராருடி

ஆ-பெ. நாடும் வீடும் வாழ கூடி ஒன்று போல
தினம் நாமே உழைப்போமே மலை நாட்டிலே
சிக்குபுக்கு நீலகிரி தொப்பித்தோட்டம்
நாங்க வந்த கப்பலில மிச்சம்கூட்டம்.

ஆ. கண்டாங்கி சேலக்காரி
கோடாலி கொண்டக்காரி
தெம்மாங்குப் பாட்டுப்பாடி தேடினேன் ஒன்ன தான்

பெ. வானம் பாத்த பூமி போல வாழ்வையா
காலம் வரும் காத்திருப்போம் கண்ணையா

ஆ.பெ. வானில் ஓடும் மேகம் வாழ்த்துப் பாடி ஓடும்
சுபநாளும் வரவேண்டும் நம் வாழ்விலே
சிக்குபுக்கு நீலகிரி தொப்பித்தோட்டம்
நாங்க வந்த கப்பலில மிச்சம்கூட்டம்

குறிஞ்சி நிலா

இசை : எம்.எஸ்.செல்வராஜா
பாடியவர் : நிரோஷா விராஜினி

குறிஞ்சி நிலா வாடுதம்மா பிள்ளை மடுவத்திலே
வருந்தி மனம் தேடுதம்மா அன்னை உருவத்தையே
குடும்பமதே வாழ்வதற்கே கூடையினை சுமந்தேயிங்கே
கொழுந்தெடுக்கப் போனாளம்மா அதிகாலைப் பனியினிலே
ஆராரோ ஆராரோ ஆரிரரோ ஆராரோ

தாயவள் போலே அந்தி பகல் நீயே
தேயிலைத்தூரில் துன்பம் கொள்ளலாமோ
பள்ளி சென்றுமே கல்விச் செல்வமே
நீயும் கற்று நாட்டில் புகழ் பெற்ற வேளை
உன்னைப் பெற்ற தாய் மனசில்
தென்றலே வீசிடுமே
கனியே அமுதே கண்தூங்கு மகளே

சாரலில் ஏறி மலை வெய்யில் தாங்கி
தேய்பிறை போலே பெண்ணழகும் தேய்ந்தே
கண்ட தொல்லையே சென்று நல்லதோர்
ஏற்றமிகு வாழ்வை நீயும் பெற்று வாழ
அன்னை எனும் தெய்வமதே
சென்றதே மாமலைக்கே
கனியே அமுதே கண்தூங்கு மகளே.

சுயம்வரமோ சுபதினமோ

இசை : டி.எஸ். முருகேஸ்
பாடியவர் : நிலுக்ஷி ஜெயவீரசிங்கம்

சுயம்வரமோ சுபதினமோ பூவினமோ சுயம்வரமோ
இளமனசில் புதுக்கனவோ இளவரசன் வரும் தினமோ
எத்தனை மலர்கள் எத்தனை நிறங்கள்
தென்றலில் ஆடிடும் எத்தனை யெத்தனை
பனி இதழ்கள் அம்மம்மா

மிதிலையில் ஜானகி ரசித்ததுவோ
யமுனையில் ராதையும் அணைத்ததுவோ
மேகமும் காதலை தூதுசொல்ல
ஆசையில் சகுந்தலை முகர்ந்ததுவோ
யார்வரவே இந்த மாதவமோ
ஆதவனே உங்கள் காதலனோ

மணம்தர கூந்தலில் தேன் மலரே
பாவையர் பூச்சரம் சூடுவரே
சுவைதரும் கனிகளின் பிறப்பிடமே
பாவலர் காவியம் பாடினரே
பூவினமே வண்ணப் பூவினமே
ஆனந்தம் மனதில் நீங்களே

அம்மா உன் பூவான முகம் காணவே

இசை : சரத் விக்ரம
பாடியவர் : நிலுக்ஷி ஜெயவீரசிங்கம்.

அம்மா உன் பூவான முகம் காணவே
அன்பே செந்தீயாக மனம் ஏங்குதே
பொருள் தேடி வெளி நாடு நீ போகவே
துயர் சூழ நம் வீடு இருளானதே

பொன்னென்ன பொருளென்ன அவையாவுமே
என் தம்பி என் தங்கை இளநெஞ்சிலே
மாறாத தாய்ப்பாசம் போலாகுமா
எந்தக்கடன் தீரவோ
உந்தன் உடல் நோகவே
கற்பூரமாய் எரியப் போனாயோ
பொன்வானிலே ஓடும் மேகங்களே
என் தாய்க்கு என் சேதி சொல்லுங்களே

உள்ளன்பு உயர் பண்பு அறம் யாவுமே
மனம்கொள்ள கதை சொன்ன என் அன்னையே
தூங்காத என் கண்கள் நீரோடையோ
அந்த தொடுவானிலே
மின்னும் மீன் போலவே
தொலை தூரமே நாடிப் போனாயோ
கண்ணீரிலே வாழும் சோகங்களே
எந்நாளில் அது மாறும் என் நெஞ்சிலே.

கீழ்வானம் சிவந்ததம்மா

இசை : எம்.எஸ்.செல்வராஜா
பாடியவர்கள் : நிலுக்ஷி ஜெயவீரசிங்கம் குழு.

கீழ்வானம் சிவந்ததம்மா
விடிவெள்ளி பிறந்ததம்மா
உழைக்கும் கரங்களே ஒன்று சேர வாருங்களே
சுரண்டும் மனிதர்களை வென்று வாழ பாடுங்களே

ஒருதாய் மக்கள் போலிங்கே
சேர்ந்தே செல்வோம் நாமிங்கே
உழைக்கும் வர்க்கம் தானிங்கே
வெற்றி கொண்ட நாளின்றே
மேதினம் இன்று மேதினம்
மேதினி போற்றும் மேதினம்

உழைப்பவர் நாங்கள் ஒரு குலமே - என்றும்
ஊரைக் காப்பது எங்கள் இருகரமே
ஜாதிகள் பாஷைகள் பேதமில்லை - எங்கள்
வாழ்வினில் வேசங்கள் ஏதுமில்லை
நெஞ்சம் ஆயிரம் பாடுது பாசுரமே
எங்கும் வீதியில் மேதின ஊர்வலமே

மலர்ச்சரம் சூடும் வளைக்கரங்கள் - இந்த
வையகம் போற்றிட துணைவருமே
ஆலைகள் சாலைகள் வயல்களிலே- நாம்
சேவைகள் செய்வோம் மகிழ்வுடனே
நெஞ்சம் ஆயிரம் பாடுதே பாசுரமே
எங்கும் வீதியில் மேதின ஊர்வலமே.

உழைக்கும் கரங்களே

இசை : எம்.எஸ்.செல்வராஜா
பாடியவர் : எஸ்.ஜேசுரட்ணம்

உழைக்கும் கரங்களே
ஒன்று சேர வாருங்களே
இங்கே அழைக்கும் குரல்களை
கேட்டு கானம் பாடுங்களே
உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
ஊருக்கும் உலகுக்கும் நாம் அதை சொல்வோம்

இயற்கை தரும் செல்வம் எல்லாம் பொதுவாகுமே
உலகம் என்றும் உயர்வுக்கு இதே விதியாகுமே
காடு மேடு மலைகள்
எல்லாம் களணியானதே
பாடு பட்ட மக்கள் கைகள்
உழைப்பு தானதே
உழைப்பவர் கொண்டாடும் மேதினம்
ஒன்றாய் நாம் பாடிடும் மேதினம்

தொழில்கள் எல்லாம் உயர்வானதே புவிமீதிலே
பலர் வாழ எம் சேவை தேவையாகுமே
ஓடும் ரதம் மாடி வீடும்
நாமே செய்வோமே
மானம் காக்க ஆடைகள்
நெய்வதும் தொழிலாளியாகுமே
உழைப்பவர் கொண்டாடும் மேதினம்
ஒன்றாய் நாம் பாடும் மேதினம்.

இலங்கையர் நாம் இலங்கையர்

இசை : எம்.எஸ்.செல்வராஜா
பாடியவர்கள் : எஸ். கிருஷ்ணகுமார்
ஜெகதேவி விக்னேஸ்வரன்
நிலுக்ஷி ஜெயவீரசிங்கம்

இலங்கையர் நாம் இலங்கையர்
சமத்துவமாக வாழ
உரிமைகளோடு வாழ
துதிப்போம் துதிப்போம்
எங்கள் தாய் நாட்டை

தொடரும் துன்பம் போதுமே
இனிமை மலர வேண்டுமே
மானிடர் எல்லோருமே ஆனந்தமாகவே
வாழும் நந்நாள் வரவேண்டுமே
மஞ்சள் வானில் வெண்புறா
தென்றலாகப் பறந்தே
வருமோ நெஞ்சமே மகிழத்தானே

வண்ண வண்ண சிறகினில்
பறக்கும் பறவை போலவே
சுதந்திரமாகவே பிறந்தது யாருமே
வானம் பொதுவே பூமியும் பொதுவே
இயற்கை எல்லாம் பொதுவிலே
இறைவன் தந்தான் உலகிலே
வருமோ விடிவு விரைவில் நாட்டில்.

போராலே உலகில்

இசை : எம்.எஸ்.செல்வராஜா
பாடியவர் : என்.ரகுநாதன்

போராலே உலகில் தீராத துயரே
வீணாக விழிநீரும் ஏனோ
ஆறாக வழிந்தோடலாமோ
ஒரு வானம் ஒரு பூமி இது போல ஒரேநீதி
இருந்தாலே சோகங்கள் ஏனோ
திருந்தாத உள்ளங்கள் ஏனோ

பேராசையாலே உருவான தீயை
நீரூற்றி அணைப்பாரும் யாரோ
பூங்காற்று வீசும் பொன்னான நாளும்
காணாமல் ஏன் போனதோ
பூகம்பம் உருவானதோ
புவி தாங்குமோ
புயல் நீங்குமோ
விடிவாகுமோ.

பூஞ்சோலை யாவும் சருகான பின்னே
பூச்சூட நினைப்பாரும் யாரோ
மாந்தோப்பு மயிலும் பண்பாடும் குயிலும்
பேசாமல் தான் வாடவோ
ஊரெங்கும் இருளானதே
யுகம் வாழவே
ஒளி தோன்றவே
வழிவேண்டுமே.

வெள்ளைப்புறாவே

இசை : கே.எம். ஜவாஹிர்
பாடியவர் : ஜெகதேவி விக்னேஸ்வரன்

வெள்ளைப் புறாவே
புதுச்சேதியின் மடல் ஏந்தியே
விரைந்தே நீ வா வா
உள்ளம் எல்லாமே பூஞ்சோலையாய்
மணம் வீசவே விரைந்தே நீ வா வா

கோடையில் மழை வந்து புதுவெள்ளம் பொங்குதே
ஓடைகள் வழிந்து புதுப்பூவும் பூக்கவே
இதயவீணை உதய ராகம் மீட்டுதே
விடியல் பாதை பொன்மயமாய் தெரியுதே
ஒளி தோன்றியதே கீழ் வானிலே
தென்றல் இனி நம் வாழ்விலே

காரிருள் திரை சென்று விடி வெள்ளி பிறக்கவே
கோயில் மணி சொல்லும் நம் காலம் வெல்லுமே
நல்ல நல்ல சேதி காதில் கேட்குதே
மெல்ல மெல்ல வந்து எங்கும் பரவுதே
வாழ்த்துகள் ஒலிக்க துயர் நீங்கவே
மாந்தர் மகிழ்ந்ததைக் காணவே.

எங்கே போகிறோம்

இசை : எம்.எஸ்.செல்வராஜா
பாடியவர் : கே. விஜயரட்ணம்

எங்கே போகிறோம் - நாம்
எங்கோ போகிறோம்
அன்பே அறியாப் பாவிகளாய்
ஆசைக்கடலில் அலைமோதி
எங்கே போகிறோம்

பொன்னும் பொருளும் உயர்வென்றே
போதை வந்த பிறகிங்கே
மண்ணில் தர்மம் இனியேது
உண்மை வெல்ல வழியேது
ஆசை மேகங்கள் மூடிய நெஞ்சினில்
கருணைக்கு இடமேது
மானிட நேசங்கள் அழிந்த பின்னாலே
வாழ்வதில் பயனேது

நெல்லும் பதரும் சமமென்று
விலைகள் சொல்வார் சிலரிங்கே
சொல்லும் செயலும் வேறென்றே
வெல்லும் வழிகள் பல கண்டார்
பாவச்சுமைகளை தோளில் சுமந்தே
பயணம் போகின்றார்
பாலைவனத்தினில் கானலை நீரென
தேடியலைகின்றார்.

அன்னை தேசமே

இசை : எம்.எஸ். செல்வராஜா
பாடியவர் : என். ரகுநாதன்

அன்னை தேசமே சுதந்திர அன்னை தேசமே
விண்ணைப் போலவே உலகினில் உந்தன் நாமமே
எங்கும் பேசவே என்றும் வாழவே
எந்தன் நெஞ்சமே உன்னை வாழ்த்துமே

இந்து மகா கடல் மாணிக்கமே
தங்க விழா கண்ட தீவினிலே
அன்பெனும் மந்திரம் துணையுடனே
சங்கமமாவோம் மனங்களிலே
யாழிசை சுவையில் மீன் பாடும்
மாமயிலாடும் திருநாடே

கங்கை மகாவலி ஓரத்திலே
களனி மகாநதி தீரத்திலே
செந்தமிழ் சிங்களம் மொழிகளையே
மங்கள மேனியில் அணிந்தவளே
நால்வகை இனமும் வாழ்கவே
வானுயர் பாதமலை போலே.

ஒரு மரத்துப் பறவைகளே

இசை : ஏ. மகேந்திரன்
பாடியவர் : அமுதன்அன்னாமலை

ஒரு மரத்துப் பறவைகளே வானம் நமதே
சிறகடித்துப் பறந்திடுவோம் கானம் இசைத்தே
ஒன்றுபட்ட உறவினிலே உயர்வேதானே
துண்டுபட்ட பிரிவினிலே துயரே வீணே

ஆயிரம் மலர்கள் மலரட்டுமே
அன்பெனும் சோலையிலே
ஆயிரம் இனங்கள் மகிழட்டுமே
எங்கெங்கும் பூமியிலே
கோபுரம் போலுள்ளம் உயரட்டுமே
வாழ்ந்திடும் காலத்திலே
கேளுங்கள் நாளை பொன்னாள் தானொன்று
சேர்ந்தால் உண்மையிலே

மானிட நேசங்கள் வளரட்டுமே
நெஞ்சௌனும் கோயிலிலே
மாநதி போலின்பம் பெருகட்டுமே
நாம் செல்லும் பாதையிலே
தேவனின் ஆசிகள் ஒலிக்கட்டுமே
ஆலய மணிகளிலே
பாருங்கள் காலை கீழ்வான மெங்கும்
ஆதவன் தோன்றுதங்கே.

புத்தம் புது நெல்லறுத்து

இசை : எம்.எஸ்.செல்வராஜா
பாடியவர்கள் : எஸ்.கனேஸ்வரன்
ஏ.எம்.ஜெயந்தி

புத்தம் புது நெல்லறுத்து
முத்து முத்து பச்சரிசி
செங்கரும்பு சாறு கலந்து
சூரியனுக்கு மங்கள வெளக்கு வச்சி
பொங்கல் வைப்போமே

மழ பேஞ்சி வரம்பு கட்டி
நாத்து நட்டு வயல் செழிச்சி
களணி எங்கும் கதிராச்சி
மனசு எல்லாம் குளுந்து போச்சி
பொங்குதே இன்பம்
சாமிய நம்பி பூமிய நம்பி
பாடு பட்டா பலன் கெடைக்கும் தங்கமே தங்கம்

பயிர் வெளஞ்சி குணிஞ்சிருக்கு
கருதறுத்து போரடிச்சி
மலமலயா நெல் குமிச்சி
ஊருக்கெல்லாம் பாக்கு வச்சி
தங்கமே தங்கம்
மேளம் கொட்டி தாலி கட்ட
ஓடி வருவேன் ஒன்ன நெனச்சி பொங்குதே இன்பம்.

செந்தூரப் பூ வொன்று பெண்ணாகவே

இசை : எம்.எஸ். செல்வராஜா
பாடியவர் : கே. மகிந்தகுமார்

செந்தூரப் பூவொன்று பெண்ணாகவே
கண்டேனே நானிங்கு பண்பாடவே
கண்காணும் கனிச்சோலை சாம்ராஜ்யம்
என் வாழ்வில் இனிதானே சந்திரோதயம்

எனையே தந்தேன் சமர்ப்பணம்
நீயே எந்தன் சரணாலயம்
இதழூறும் தேனிலே
பசியாவும் தீரவே
வருமோ ராஜயோகம்
தருமோ ஏகபோகம்
செம்மலராகவே முகம் நாணியே வரும்போதிலே
மெல்லிசையாகவே உன் வாய் மொழி எனைநாடுதே

நேரே வருதே உயிரோவியம்
எனது வானில் அருணோதயம்
ஸ்ரீதேவி போலவே
சிலையான மேனியே
முகமோ பாரிஜாதம்
குரலோ வேணுகானம்
பெண்ணிலவாகவே தொடுவானிலே உனைக்காண்கிறேன்
வெண்முகிலாகவே உன் கூடவே வரப்போகின்றேன்.

பால்வண்ணக் கோலம் வரைந்த நிலா

இசை : எம்.எஸ். செல்வராஜா
பாடியவர் : நிலுக்ஷி ஜெயவீரசிங்கம்

பால் வண்ணக் கோலம் வரைந்த நிலா
யமுனையில் ராதை மகிழ்ந்த நிலா
மனதினில் ஆசையை விதைத்த நிலா
என்னுயிர் நாதனை அழைத்து நிலா
வருவாயோ என் வாசல் சொல் வான்நிலா

மாணிக்கப் பந்தலில் பூச்சூடியே
ஆனந்தப் பண்பாட மனம் ஏங்குதே
பொன்வானம் தேன் சிந்தும் அந்தி நேரமே
என் ஜீவன் உனைப்பாாத்து வாசல் ஓரமே
நீலக் கடலாடும் அலைகலைப் போலே
சதிராடுதே சதிராடுதே
நிலவு வரும் நேரம் பேதை என் மனமே
உன்னைத் தேடுதே உன்னைத் தேடுதே

ஊரெங்கும் காணவே மணமேடையில்
ஆசைகள் யாவுமே நிறைவேறுமா
பிறக்காதோ புதிய நாளும் எந்தன் வாழ்விலே
மலராதோ பூவினங்கள் வாசம் வீசியே
வீணை யெழும் நாதம் காதல் எனும் கீதம்
அரங்கேறுமோ அரங்கேறுமோ
கண்கள் உறவாலே நெஞ்சம் இடம்மாறி
பெண்மை வாடுதே பெண்மை வாடுதே.

தங்க மகளே

இசை : எம்.எஸ்.செல்வராஜா
பாடியவர் : நிலுக்ஷி ஜெயவீரசிங்கம்

தங்க மகளே பிஞ்சு நிலவே பாரம்மா - உன்
மஞ்சள் முகத்தில் சோகமென்ன கூறம்மா
எந்த மலரும் அழகு தானே கேளம்மா
பூவில் ஏழை செல்வம் பேதமில்லை தானம்மா

ஏழ்மையிலே வளர்ந்தவளே துயரினிலே
நிழல் பார்த்து தலை சீவும் திருமகளே
அலைமோதும் வாழ்க்கையெனும் படகினிலே
புயல் சூழும் இடர் கூடும் வழியினிலே
நிலை மாறும் ஒளி வீசும் பொறுமகளே
துயர் தீரும் போய்ச்சேரும் கரையினிலே

மண் குடிசை வாசலிலே நிலவினிலே
கண் கலங்கி நிற்பவளே தனிமையிலே
எண் எழுத்தை சிறப்புடனே இளமயிலே
நீ படித்தே புகழ் பெறனும் அரங்கினிலே
உன் பெயரும் உயர்திடும் உலகினிலே
பொன் பொருளும் தேடிவரும் முடிவினிலே.

மஞ்சள் நிலவு முகிலணிந்து

இசை : எம்.மோகன்ராஜ்
பாடியவர்கள் : என்.ரகுநாதன்
நிலுக்ஷி ஜெயவீரசிங்கம்

ஆ. மஞ்சள் நிலவு முகிலணிந்து
மண்ணில் உலவ கண்டு கொண்டேன்
கண்களினாலே காவியம் வரைந்து
நெஞ்சில் சிலையாய் நிறைந்தாயே
பெ. மஞ்சள் நிலவு முகிலணிந்து
மண்ணில் உலவ வந்துவிட்டேன்
கண்களினாலே காவியம் வரைந்து
நெஞ்சில் சிலையாய் நிறைந்தாயே

ஆ. புதுமேகம் வானோடி
பனிதூவ அசைந்தாடி
மலைச்சாரல் நதியோரம்
இளம் பாவை வந்தாய் தேடி
பெ. புதுமேகம் வானோடி
பனிதூவ அசைந்தாடி
மலைச்சாரல் நதியோரம்
இளம் பாவை வந்தேன் பாடி

ஆ. காற்றில் நின்றாள் கண்ணசைத்து
காதல் கொள்ளும் பண்ணிசைத்து
ஆற்றில் வெள்ளம் நிறைந்த கோலம்
மனம் துள்ளும் புது ஜாலம்
பெ. காற்றில் நின்றேன் கண்ணசைத்து
காதல் கொள்ளும் பண்ணிசைத்து
ஆற்றில் வெள்ளம் நிறைந்த கோலம்
மனம் துள்ளும் புது ஜாலம்.

வானவில் ஒன்று வா வா என்று

இசை : எம்.சிவகுமார்
பாடியவர்கள் : எம்.சிவகுமார்
ராணிஜோசப்

ஆ. வானவில் ஒன்று வா வா என்று
கண்களில் பேசுதே புன்னகை பூக்குதே
வாசலில் சின்ன ரோஜா ஒன்று மின்னலைப் போலவே
சென்றது நாணியே
பெ. கார்முகில் ஒன்று மாநதி கண்டு
சங்கமம் தேடுதே செந்தமிழ் பாடுதே

ஆ. காற்றாக மாறி மூச்சாக நானே
உயிரோடு கலப்பேனே உன்னோடு இணைவேனே
பெ. ஆறாக நீயும் கரையாக நானும்
தொலைதூரம் நடப்போமே தொடுவானை அடைவோமே
ஆ. கைரேகையாக நான் மாறி
ஒரு நாளும் பிரியேனே
உடலும் உயிரும் ஒன்றல்லோ

பெ. தீயாக வேகும் மோகங்கள் தீர
நீராக வருவேனே நிழலாகத் தொடர்வேனே
ஆ. பூந்தேரில் ஏறி பூஞ்சோலை நாடி
பொன்மேனி தொடலாமோ
புதுப்பாடம் படிப்போமா
பெ. பால் போல திங்கள்
தேன்தூவும் தென்றலின்
தனிமை இனிமை இன்றல்லோ

ஒரேயொரு பார்வையில் மயங்கி

இசை : சரத் விக்கிரம
பாடியவர்கள் : வி. முத்தழகு
நிலுக்ஷி ஜெயவீரசிங்கம்

பெ. ஒரேயொரு பார்வையில் மயங்கி
நிலாவினில் தேடுதே மனமே
ஆ. அலங்காரம் கலையாத பால் வண்ணச் சிலையோ
பெண்ணென்ற சிறு மின்னல் சிரிக்கின்றதோ
தரையில் வந்த இவள் பொன்மேகமோ
பெ. ஒரேயொரு பார்வையில் மயங்கி
நிலாவினில் தேடுதே மனமே

ஆ. மீனாடும் விழிரெண்டும் தேனோடும் அருவி
புதுவெள்ளம் வழிகின்ற நதி போன்ற தலைவி
பெ. இளநெஞ்சம் இனிதாக கிளிபேசும் மொழியில்
உறவாடும் மணநாளும் வரவேண்டுமே

ஆ. பூமேனி சிலையொன்று ஊர்கோலம் போகும்
அது வண்ண மலரென்று மதுவண்டு மோதும்
பெ. சிறு வெள்ளி மழை போல பனி தூவும் நிலவில்
இசைபாட வருவேனே என் தேவனே

பூவே பூவே மௌனம் ஏனோ

இசை : சரத் விக்ரம
பாடியவர்கள் : வி. முத்தழகு
நிலுக்ஷி ஜெயவீரசிங்கம்.

ஆ. பூவே பூவே மௌனம் ஏனோ
உறவைத்தரவே தயக்கம் ஏனோ
வாசம் வீச ஓடி நீயும் மறைந்ததேனோ
நேசம் தேடும் கண்ணன் என்னை மறந்ததேனோ

பெ. நிலவே மலரை சுடுவதேனோ
குயிலின் குரலை மறுப்பதேனோ
வானம் விட்டு மேகம் தூரம் செல்வதுமுண்டோ
நாணம் கொண்ட பெண்ணில் ஊடல் கொள்வது நன்றோ.

ஆ. சிலையும் கலையும் தமிழும் சுவையும்
தனியே தனியே பிரிந்ததுண்டோ
மோக நிலா தூதுசொல்ல வரவில்லையா
ஓடும் மேகம் என் பாடல் தரவில்லையா

பெ. நதியும் கரையும் இசையும் ஒலியும்
தனியே தனியே பிரிந்ததுண்டோ
வாசல் வரும் மாலைத் தென்றல் சொல்லவில்லையா
வானில் உலா வரும் கானம் கேட்கவில்லையா

ஆ. மழையும் முகிலும் பனியும் குளிரும்
வெவ்வேறென்றே சொல்வதுண்டோ
வானவில்லின் ஏழுநிறம் பிரிவதுண்டோ
ராகம் தர வீணை என்றும் மறுப்பதுண்டோ

பெ. குயிலும் குரலும் கடலும் அலையும்
வெவ்வேறென்றே சொல்வதுண்டோ
ஆசைக்கனா நூறுகதை சொல்லவில்லையா
காதல் புறா தேடி வர துணிவில்லையா.

மங்கள கோலங்கள் வாசலிலே

இசை : எம்.எஸ்.செல்வராஜா
பாடியவர் : கே.விஜயரட்ணம்

மங்கள கோலங்கள் வாசலிலே
மாவிலைத் தோரணம் வீதியிலே
பொங்கி வரும் பொங்கலெனும் பொன்னாளிலே
மங்கிவிடும் துன்பம் இனி எந்நாளுமே
பொங்கலோ பொங்கல் பொங்கலோ பொங்கல்

நல்ல நாளில் தை பிறந்தது
உள்ளம் இசைபாட வழி பிறந்தது
மங்கையர் அமுதம் பொங்கவே
செந்தமிழர் கீதம் எங்குமே
உழவர் நெஞ்சம் மலரும் திருநாளிதே
உறவும் ஒன்று சேரும் பெருநாளிதே

முல்லை போல ஒளி தெரிந்தது
இல்லையென வானில் இருள் மறைந்தது
செங்கதிர் தினமும் விண்ணிலே
செய்திடும் பணியை எண்ணியே
புதுநெல் பொங்கல் வழங்கி புவிமீதிலே
தமிழர் இதயம் மகிழும் தினமாகுமே

கங்கை கரைதனில் கண்ணன்

இசை : எம்.எஸ்.செல்வராஜா
பாடியவர்கள் : ஜெயலெட்சுமி, விஜெயலெட்சுமி சகோதரிகள்

கங்கைகரைதனில் கண்ணன்
எந்தன் கனவினில் வந்தான் தோழி
தங்க ரதம் என்னும் மணவறைதனிலே
ரகசியம் சொன்னான் காதில்

மஞ்சள் நிலவுக்கு தோரணம் போல்
மின்னும் தாரகை கூட்டத்திலே
கோபியர் நடுவில் கோகுலகண்ணன்
என் காதலன் நின்றானடி
அன்பு மீரா என்றே என்னை
புல்லாங்குழலிசையாலே
வாராய் என அழைத்தானடி

கோகுல வீதியில் கோதையர்க்கு
அன்புத் தொல்லைகள் செய்தவனே
இன்று எல்லோருக்குமே அந்த ஆயர்பாடிதனில்
செல்லப் பிள்ளையவனே
அந்த நீல வண்ணகண்ணன்
மாலையிட்டே என்னை
ஆட்கொண்ட தெய்வமடி.

சின்னச் சின்ன பறவை இனம்

இசை : சரத்விக்ரம
பாடியவர் : விஸ்வநாதன் சதானந்தன்

சின்னச் சின்ன பறவை இனம்
உள்ளம் துள்ள சிறகடிக்க
மெல்ல மெல்ல கருமை நிறம்
மேகம் விட்டு தூரம் செல்ல
வண்ண வண்ண ஓவியமாய்
வானம் எங்கும் கோலம் கொள்ள
பொங்கி வரும் புதுமலராய்
செங்கதிரும் எழுந்ததம்மா

காலைப்பனித்துளி பூக்களில் மின்னிட
காவியம் சொல்லுதங்கே
நீலக் குயிலிசை ஆனந்தராகத்தில்
நெஞ்சத்தை கிள்ளுதிங்கே
தாமரை மொட்டுகள் ஏரிக்கரையினில்
மௌனத் தவம் புரிந்தே
மாமரத்தோப்பினில் ஆதவன் பார்வையில்
சில்லெனப் பூத்தனவே.

செந்தூரப் பூவினில் சிந்திடும் தேனுண்டு
வண்டுகள் பாடுதிங்கே
தென்றலில் ஆடிய பூச்சரம் சூடிய
தேவதை போல வந்தே
செந்தமிழ்ச் சோலையின் தேன்மொழிப் பாவையின்
வேல்விழி பேசுதிங்கே
காலைக்கதிரவன் வானில் உதிக்கின்ற
காட்சியின் ஆரம்பமே.

கண்ணன் அங்கே காத்திருப்பான்

இசை : எம்.எஸ்.செல்வராஜா
பாடியவர் : வனஜா ஸ்ரீநிவாசன்

கண்ணன் அங்கே காத்திருப்பான்
ராதை என்னை பார்த்திருப்பான்
கங்கை கரையோரத்திலே
மஞ்சள் அந்திநேரத்திலே
கண்ணா கண்ணா

கோகுல வீதியிலே - அங்கே
கோபியர் கூட்டத்திலே
மூங்கிலின் நாதத்திலே - இன்ப
மோகன ராகத்திலே
கண்களின் பாஷையிலே
உயர் காதலை போதித்தவன்
நிதம் நிதம் கொஞ்சி கொஞ்சி
எந்தன் நெஞ்சத்தை கிள்ளியவன்
தினம் தினம் மெல்ல மெல்ல
எங்கும் நேசத்தை தூவியவன்.

காலைக் கதிரினிலே - வீசும்
காற்றின் அசைவினிலே
கொட்டும் அருவியிலே - கிளி
கொஞ்சும் மழலையிலே
பூக்களின் வண்ணத்திலே
அன்னை பால் தரும் கின்னத்திலே
என்றும் என்றும் நீலவண்ண
எங்கள் மோகன கண்ணன் அவன்
எங்கும் எங்கும் இன்பம் பொங்கும்
இளம் மாங்கனிச் சோலையவன்.

சோலையோரம் மாலைநேரம்

இசை : சரத் விக்ரம
பாடியவர் : எஸ். கலாவதி

சோலையோரம் மாலைநேரம்
சலசல நதிக்கரையிலே
இனிமையான நிவைு போல
புதுப்புது இசை மனசிலே
மலரென நானே மனமகிழ்வேனே
பனிவிழும் புது நிலவிலே
ஒளி மழையென பொழியுதே

பூமேகம் அழகான மலராகத்தானே
வீணே அலைமோத மேலாடைபோலே
தெரிவது கனவாமோ
மயங்குது மனமேனோ
நிலவினில் நானே
வலம் வரத்தானே
குயிலிசை மரக்கிளயிலே
அலை அலையென பொழியுதே

பூங்காற்று இசை பாடப் புது வீணைபோல
யாரோ கதை பேச தேனாகத்தானே
நெஞ்சினில் அலைபோல
சந்தன மணமேனோ
மல்லிகைப்பூவே
சிந்தியதேனோ
மணிமொழி இளமனதிலே
கனிகளின் சுவை மலருதே

நிலவு நெஞ்சிலாடுதே

இசை : எம்.எஸ். செல்வராஜா
பாடியவர் : எஸ். ஜேசுரட்ணம்

நிலவு நெஞ்சில் ஆடுதே
உலா போகும் போதிலே
பருவ நிலா நடை பழக விழிகள் பேசுதே - நான்
பார்க்கப்பார்க்க முகம் மலர்ந்தே நிலத்தைப் பார்க்குதே

வானில் வரும் தேவதையை நேரில் காண்கிறேன் - அந்த
வானவில்லின் கானங்களை நானும் கேட்கிறேன்
ஒரு கோடி மின்னல் மெல்ல நடந்து போகுதே
இசை பாடி உள்ளம் துள்ள தொடர்ந்து போகிறேன்
உள்ளம் சொல்லும் உறவை
ஓரக் கண்கள் கொஞ்சம் காட்டுதே

மானும் அவள் விழிகளையே இரவல் கேட்குமே - நெடும்
கார் குழலை வான் முகிலும் காண ஏங்குமே
இளம் பாவை நெஞ்சில் பள்ளி கொள்ள தோன்றுதே
புதுத் தோகை உனை அள்ளிக்கொள்ள விழிகள் தேடுதே
அமுதம் சிந்தும் மலரை
என் இதயம் என்றும் வாழ்த்துமே.

பூமரங்கள் எங்கும் சாமரம் வீசுது

இசை : எம்.எஸ்.செல்வராஜா
பாடியவர் : நிலுக்ஷி ஜெயவீரசிங்கம்

பூ மரங்கள் எங்கும் சாமரம் வீசுது
பாசுரங்கள் நெஞ்சம் ஆயிரம் பாடுது
காலையிலே இன்பவேளையிலே
சோலையிலே மலைச்சாரலிலே
ஆதவன் வண்ணத்தோரணம் வந்தது
வானத்திலே புதுநாளினிலே

முத்து முத்து பனித்துளிகள்
வெள்ளிச்சரம் பொழிகிறது
மெல்ல மெல்ல விண்திரையில்
தங்கநிறம் எழுகிறது
வானம்பாடி கூட்டமாக கானம் பாடவே
வானரதம் தோன்றியதே பார்முழுதும் ஒளிபெறவே

வண்ண வண்ண மலைத்தொடரில்
பொங்கி எழும் அருவிகளில்
பச்சை நிற வயல்வெளியில்
தென்றல் வந்து தவழ்கிறது
தாழம்பூவின் தோற்றமாக மாதர் கூடவே
மகாவலியின் ஓரத்திலே மாநதியின் கரைகளிலே
பாவை குரல் கேட்கிறதே தேன்தமிழில் இசையெனவே

உயிரே குயிலே

இசை : சரத் விக்ரம
பாடியவர் : வி. முத்தழகு

உயிரே குயிலே உயிரில் கலந்த உறவே
நிலவே நிழலே நீரில் நிறைந்த குளிரே
உனையே நினைந்தே மனமே
பிரிவாலே வாடலாமோ

காதல் வானிலே நீயும் நானுமே
காலம் யாவுமே பூந்தேரிலே
கானம் பாடியே வாழும் ஆசையே
கானல் தேடிடும் மானானதே
வானவில் நிறங்கள்போலே
நேசமும் மறைந்ததேனோ

பேசும் வீணையே நாதம் மாறவே
ஜீவன் வாடியே போராடுதே
ஓடும் மேகமே சோகம் பாடவே
மாலை நேரமே வீணானதே
மாதுளம் கனிந்த தேனே
நாதனை மறந்ததேனோ

வானவில்லே வண்ணப் பூச்சூடி

இசை : ஜெயகாந்தன் பாபு
பாடியவர் :

வானவில்லே வண்ணப் பூச்சூடி ஊர்வலம் போகுதே
வாசல் வந்தே கொஞ்சும் விழியாலே ரகசியம் பேசுதே
மேகங்களே ஓடுதே வானில் உன்னையே தேடுதோ
தேவியின் தரிசனம் நாடுதே

பொன் வானிலே வரும் தேன்நிலா
உன் மேனியில் முகம் பார்க்குமே
பூவும் இங்கே உன்னைக் கண்டால்
சூடிக்கொள்ளவே ஆசைகொள்ளுமே
தாமரை மலர்முகம் நாடியே
கண்கள் உன்னையே தேடுதே
நேசம் கொள்ளவே பாடுதே

முகில் கூடவே கண்டு ஏங்குமே
கருங்கூந்தலைக் கடன் கேட்க்குமே
பாயும் அம்போ நீலக் கண்களோ
மின்னும் கன்னம் அந்தி வானமோ
நதிகளின் இருகரை போலவே
இருவரும் பயணம் போகவே
விரைவினில் வருமோ நாளுமே

தெருமீது தனியே

இசை : சரத் விக்ரம
பாடியவர் : எம். சிவகுமார்

தெருமீது தனியே
எனையே மறந்தே
போறாளே பூமேனியே
தேனூறும் பூவே
உறவே வராதோ

செந்தேன் சிந்தும் அழகின் நிலா
தனியே இங்கே வருமோ உலா
அழகே உன்னை விலைபேசவே
உலகே இங்கே இணையாகுமா
வாராதோ மணநாள் விழா
உனை மணந்து தேரேறவே

பொன்மான் உந்தன் நிறமல்லவா
விழியே வந்தே கதை சொல்லவா
மனமே எண்ணி அலைமோதுதே
கனவோ இது நனவாகுமோ
போகாதே பறந்தே புறா
எனைப் பிரிந்து வானோடியே

சித்திரைப்பூ பூத்ததம்மா

இசை : எம்.மோகன்ராஜ்
பாடியவர்கள் : ஜெகதேவி விக்னேஸ்வரன்
நிலுக்ஷி ஜெயவீரசிங்கம்.

சித்திரைப்பூ பூத்ததம்மா உதயவானத்திலே
சிரிப்பலைகள் பொங்குதம்மா இதயவானத்திலே

பால் குடம் பொங்கி வழிகின்றது
பாரெங்கும் இன்பம் பொழிகின்றது
வேல்விழி மாதரின் வளையல்களில்
வெற்றியின் நாதம் ஒலிக்கின்றது
ஆலயமணியின் ஓசையிலே
ஆசியுரைகள் கேட்கின்றது

கண்ணன் குழலிசை போலினிய
கானக் குயிலோசை கேட்கின்றது
கொஞ்சும் சதங்கையின் நாதத்திலே
கோதையர் கீதமும் கேட்கின்றது
பிஞ்சுநிலவுகள் ஆசையிலே
பேசும் மழலை இனிக்கின்றது.

கடலலை போலே ஆசைகளாலே

இசை : சரத் விக்கிரம
பாடியவர் : டி.எஸ். முருகேஸ்

கடலலை போலே ஆசைகளாலே
மனநிலை வீணே மாறுவதேனோ
பனித்திரை தானே மானிட வாழ்வே
ஆவியுமே பிரிந்தாலே வேறே துணையாரோ

சொந்தமும் வருமோ ஊரும் வருமோ
சுற்றம் தான் வருமோ
செல்வமும் வருமோ சேவகம் வருமோ
புதைகுழி தான் முடிவே
வீடும் எங்கே வாசல் எங்கே
மாண்டவர் இங்கே யாரும் இனிவருவாரோ

நெஞ்சினில் வந்தே ஊறும் அன்பே
நிலைக்கும் பாரினிலிங்கே
துன்பமும் கண்டு நீக்கும் பண்பே
அது நிதம் தேவையிங்கே
நேசம் ஒன்றே காலம் வென்று
வாழும் இங்கே பேரும் புகழ்பெறுமாமே.

தாழம்பூவே

இசை : சரத் விக்ரம
பாடியவர்கள் : வி. முத்தழகு
எஸ். கலாவதி

ஆ. தாழம்பூவே கானம் நீயே
பாடவாராயோ ஊடல் தீராதோ
பெ. நீயும் யாரோ நானும் யாரோ
ஊரும் பேசாதோ நேசம் மாறாதோ
ஆ. சீதைபோலே காதில் நீயும் பேசக்கூடாதோ
ராமன்போலே நானும்தானே மாறக்கூடாதோ
பெ. தீபம்போலே வாழத்தானே
மாலை சூடாயோ நாளும் வாராதோ
பெ. மேகம் போலே வானமீதே ஓட வாராயோ
பேசும் அன்பே காலம்யாவும் தாகம் தீராதோ
ஆ. வீணை நீயே நாதம் நானே
ஆசை மாறாதே பாசம் தீராதே

வாழ்க்கை என்பது தானே

இசை : டி.எஸ். முருகேஸ்
பாடியவர் : கே. மகிந்தகுமார்

வாழ்க்கை என்பது தானே
புகை வண்டி பயணம் போலே
ஒரு கொஞ்ச காலம் பலர் வந்து போகும்
மழை வெயில் யாவும் சமமென்று ஓடும்
தத்துவம் கொண்டது தானே.

வருவார் யாரோ போவார் யாரோ
ரெயிலினை சொந்தம் கொள்வாருண்டோ
பயணமும் முடியும் நேரமும் வரவே
கனவுகள் கலையும் காட்சிகள் மறையும்
இடையினில் மலர்ந்த உறவுகள் அந்தோ
பிரிகின்ற தருணம் விரைவினில் வருமே
வெறும் இன்பமா பெருந் துன்பமா
வாழ்வே புரியா புதிரென்பதா

மலைகளும் வேறோ சமவெளி வேறோ
வழிகளை ரயிலும் மறுப்பதுமுண்டோ
தென்றலை ரசித்தே ஓடிடும் ரதமே
புயலையும் கடந்து போகவும் வருமே
நதியுடன் கரைகள் இணைந்தது போலே
மகிழ்வுடன் துயரம் தொடர்கதை தானோ
மலர்ச்சோலையா வெறும் கானலா
வாழ்வே புரியா புதிரென்பதா

ஈராயிரம் ஆண்டினிலே

இசை : ஆனந்த செனவிரத்ன
பாடியவர்கள் : வி. முத்தழகு
நஸ்லின் சவ்ஜா

ஈராயிரம் ஆண்டினிலே
நூறாயிரம் பூ மலர்ந்தே
பாலாகிய மனங்களிலே
தேனாறுகள் பாய்ந்திடவே
வாராயே புத்தாண்டே

உன் வரவாலே நம் தேசத்திலே
உள்ளமெல்லாமே இல்லமெல்லாமே
மானுட நேசம் அன்பெனும் பாசம்
மணம் வீசவே வாராயே
நலம் யாவுமே தாராயோ

මානව දයාව සෙනහස උතුරා
සුවඳ හමා එනු මැනවි සාමය ගෙන දෙනු මැනවි

செங்கதிரோனின் விடியலைப் போலே
வெள்ளைப் புறாவும் விரைவினில் வருமே
கோடையும் மாறும் வசந்தமும் மலரும்
நவயுகம் உருவாகுமே
விழிநீரும் முடிவாகுமே

ගිම්හානය නිමාවෙයි වසන්තයක් උදා වෙයි
දැස් කඳුළු නිමා වෙයි නව යුගයක් උදා වෙයි

சிங்கள வரிகள். சுபாஷினி ஹேமமாலினி
සිංහල රචනය : සුභාෂිනි හේමමාලිනි

(ஈராயிரமாம் சித்திரைப் புத்தாண்டிலே இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் தயாரித்த சிறப்பு நிகழ்ச்சியில் இடம்பெற்ற பாடல்)

மல்லிகை முகங்கள் - டொமினிக் ஜீவாவின் 'மல்லிகை' இதழில் ஜுலை 1997ல் மலரன்பன் பற்றி வெளியான அட்டைப்படகுறிப்பு.

சமகால ஈழத்திலக்கியத்தில் முத்திரை பதித்துள்ள நோர்த்மாத்தளை மலரன்பன் அறுபதுகளில் 1967இல் தினபதியில் வெளியான "பார்வதி" என்ற சிறுகதை மூலம் இலக்கியப் பிரவேசம் செய்த மலையகப் படைப்பாளியாவார்.

தமது முதல் சிறுகதைத் மூலமே கவணிப்பும், கணிப்பும் பெற்ற பெறுமைக்குரியவர் மலரன்பன்.

ஈழத்துத் தமிழ்ச்சிறுகதைத் தொகுதியொன்றுக்காக அதுவரை(1967) வெளிவந்த மிகச்சிறந்த பத்து சிறுகதைகளைத் தேர்ந்தெடுப்பதாயின் அவற்றுள் மலரன்பனின் "பார்வதி" நிச்சயம் இடம்பெறல் வேண்டுமென இளம்பிறை ரஹ்மானின் அரசு வெளியீடான கதைவளம் என்ற விமர்சன நூலில் கருத்து தெரிவிக்கின்றார் ரகுராமன்.

இச்சிறுகதை தமிழமுது சஞ்சிகையில் "அவளொன்று நினைக்க" என்ற தலைப்பில் 1970 இல் மறுபிரசுரமானபோதே அதனை நான் படிக்க நேர்ந்தது.

மேட்டுலயத்து அண்ணாவிக்கங்காணியார் எழுத்துக்கூட்டி சுருதிசேர்த்துப் படிக்கும் பெரிய எழுத்து இராமாயணக்கதை தொடர்ந்து கொண்டிருக்க, அத்தோட்டத்தில் அந்த நான்கு நாட்களாய் பணிய லயத்துப் பார்வதியின் அந்தரங்க வாழ்வில் புயல் கிளப்பி உச்சம் பெற்று தணியும் புராணக் கதைக்கு எதிர் நிலயான - யதார்த்த நிகழ்வொன்றினைக் கலைத்துவம் குன்றாமல் கூறும் சிறந்த சிறுகதை இது.

பின்னர் நான் படித்த மலரன்பனின் "உறவுகள்" அஞ்சலி என்ற சஞ்சிகையில் மலையகமலரில் வெளிவத்த சிறுகதையாகும். மாத்தளை கார்த்திகேசு தயாரித்து அரங்கேற்றிய "காலங்கள் அழுவதில்லை" மேடை நாடகமும் "காலங்கள்" டெலிநாடகமும் மலரன்பனின் உறவுகள் சிறுகதையைத் தழுவியதாகும் என்ற உண்மையை கார்த்திகேசு பற்றி மல்லிகையில் எழுதும்போது தெளிவத்தை ஜோசப் குறிப்பிட்டுள்ளார்.

மலையகத்தின் வடவாயிலான மாத்தளைக்கு வடக்கே நோர்த்மாத்தளை எஸ்டேட்டில் பிறந்தவர் மலரன்பன். இவர் நோர்த் மாத்தளை மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் மற்றொரு மலையகப் படைப்பாளியான மாத்தளை வடிவேலனின் மூத்த சகோதரராவார்.

நோர்த்மாத்தளை மலரன்பன், மாத்தளை வடிவேலன் இருவரும் தம் சுயம் காட்டும் தனித்துவமான ஆளுமைகளுடன் மண்வாசனை வீசும் சிறந்த சிறுகதைகளைத் தந்து கொண்டிருக்கும் வீறும் விறலும் கொண்ட மலையகப்படைப்பாளிகளாவர்.

இவ்விருவருடன் மாத்தளை சோமுவும் சேர மூவரினதும் மூர்த்திகரம் வாய்ந்த சிறுகதைத் தொகுதியாக தோட்டக்காட்டினிலே எண்பதுகளின் தொடக்கத்தில் வெளிவந்தது. "இலங்கை தமிழ் இலக்கியத்துக்கு மலையகம் புதிய இரத்தம் பாய்ச்சுகிறது" எனக்குறிப்பிட்ட காலஞ்சென்ற பேராசிரியர் கலாநிதி கைலாசபதியின் முன்னுரையோடு வெளியான இத்தொகுதியில் மலரன்பனின் பார்வதி, உறவுகள், தார்மீகம் முதலிய சிறந்த சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன.

மாத்தளை கிறிஸ்தவ தேவாலயக் கல்லூரியில் கல்விகற்று ஐந்து வருடங்கள் ஆசிரியராகப் பணிபுரிந்துவிட்டு, தற்போது தனியார் நிறுவனமொன்றில் நிர்வாகியாகப் பணிப்புரிந்துவரும் மலரன்பனின் சிறுகதைகளில் கணிசமானவை பல்வேறு சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்றவை. இவை யாவும் சிகரம் வைத்தாற் போல மாத்தளை சிவஞானத்தின் பெரு முயற்சியால் சுஜாதா பிரசுரம் வெளியிட்ட இவரது "கோடிச்சேலை" சிறுகதைத் தொகுதி 1989 ஆம் ஆண்டுக்கான சாகித்திய பரிசை சுவீகரித்துக் கொண்டது. இலக்கிய வித்தகர் என்ற பட்டத்தையும் வழங்கி கலாச்சார அமைச்சு இவரை கௌரவித்தது.

கோடிச் சேலைக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் சி. தில்லைநாதன் "இத்தொகுப்பில் மிகவும் சிறந்ததென பாராட்டத்தக்கது "கறிவேப்பிலைகள்" ஒருமைப்பாடு, பாத்திரப் படைப்பு நடை, தலைப்பு யாவும் நன்கமைந்துள்ளன. ஆசிரியரின் அவதான சக்தியும், சிருஷ்டியாற்றலும் இக்கதையிலும் கோடிச்சேலை, சுயம்வரம் ஆகியவற்றிலும் மெச்சத்தக்க வகையில் காணப்படுகின்றன. ஒரு தொகுப்பில் ஒரு நல்ல சிறுகதை தேரினாலே அது விதந்துரைக்கப்பட வேண்டியதாகும்." என்கிறார்.

கொழுந்துக் கூடைக்குள் இந்த தேசத்தையே சுமக்கும் மலையகத் தோட்டத்தொழிலாளியின் "துன்பக்கேணி" யான வாழ்வை அதன் பன்முக விலாசங்களோடு. சிறுகதை என்ற இலக்கிய வடிவத்தினூடாகக் கலையாக்கித்தரும் மலரன்பன் என்ற சமூகப் பிரக்ஞை கொண்ட இம்மனித நேயப் படைப்பாளி சமகால சிங்கள கலை இலக்கியங்களோடும் ஓரளவு பரிச்சயமுள்ளவர்.

பிரபல சிங்கள் எழுத்தாளர் ஜி.பி.சேனாநாயக்கவின் "பலி கெனிம" என்ற கதையை தமது துனைவியாரின் உதவியுடன் தமிழில் மொழியாக்கஞ் செய்துள்ளார். "பலி" என்ற தலைப்பில் இக் கதை மல்லிகையில் பிரசுரமாகியது.

மலரன்பனின் தார்மீகம் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு "விவரண" சஞ்சிகையில் வெளியாயிற்று. இபுனு அசுமத் மொழிபெயர்த்த சிறுகதைத் தொகுப்பான "காளிமுத்துகே புருவேசிபாவய" (காளிமுத்துவின் பிரஜாவுரிமை) என்ற தொகுதியில் மலரன்பனின் "உறவுகள்" இடம் பெற்றுள்ளது. இத்தொகுதிக்கு முன்னுரை வழங்கியுள்ள பேராசிரியர் சுநந்த மகேந்திர உறவுகள் சிறுகதையை சிலாகித்துக் கூறியுள்ளார்.

நண்பர்களின் நச்சரிப்பு காரணமாக மலரன்பன் 1975 யில் எழுதிய "உலகம் யாருக்காக" என்ற திரைக்கதை வசன கையெழுத்துப் பிரதிக்கு திரைப்படக் கூட்டுத்தாபனம் "B" "பி" தரம் வழங்கியது. "பீ" தரம் கணிப்பு பெறும் திரைக்கதையைப் படமாக்குவததெனில் அதற்கு திரைப்படக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அன்று 50% நிதிக்கடன் பெறமுடியும்) எனினும் தவிர்க்க முடியாத காரணங்களால் அம்முயற்சி கைவிடப்பட்டது.

மயைக சிறுகதை சிற்பி காலஞ்சென்ற என்.எஸ்.எம். ராமையா வழங்கிய உற்சாகமே தன்னை நல்ல சிறுகதைகள் உருவாக்க வழிகோலிற்று என நன்றியுனர்வுடன் நினைவு கூர்கிறார் மலரன்பன்.

இசைத்துறையில் ஈடுபாடு காட்டிவரும் இவரது மெல்லிசைப் பாடல்கள் பிரபலமானவை. இலங்கை வானொலியிலும், ரூபவாஹினியிலும் ஒளி(லி)பரப்பாகி வருகின்றன.

வீரகேசரியில் வெளியான மலரன்பனின் "பிள்ளையார் சுழி" இருநூற்றாண்டு வரலாற்றைக் கொண்ட மலையகத் தோட்டத் தொழிலாளரின் வருகையைப் பிள்ளையார் சுழியிட்டுக் காட்டும் முக்கியமாகக் குறிப்பிட்ட வேண்டியதொரு சிறுகதையாகும்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களது நல்வாழ்வில் ஆழ்ந்த அக்கறை கொண்ட இவ்வாக்க இலக்கியவாதி கலாசார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி அவர்களினால் உருவாக்கப்பட்ட கலாச்சார மேம்பாட்டுக் குழுவிலும் ஓர் உறுப்பினராவார்.

மலரன்பன் தமிழுக்கு மேலும் பல நல்ல சிறுகதைகளைத் தரவேண்டுமென்பது இலக்கிய நேசங்கொண்டோர் அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

- பண்ணாமத்துக்கவிராயர் -

நன்றி - மல்லிகை

இவர்களின் பார்வையில்.....



எம்.எஸ். செல்வராஜா.

இந்நூலாசிரியர் மலரன்பன் தனது சிறுகதைகள் மூலம் பாராட்டையும், பரிசுகளையும் பெற்ற எழுத்தாளர். ஒரு பாடலாசிரியர் என்ற பெயர் பெற்று மக்கள் மத்தியிலே பிரபலமாக விளங்க ஏதுவாக இருந்தது அவர் இயற்றிய "மூங்கிலின் நாதமும் தென்றலின் கீதமும் உன் புகழ் பாடுதம்மா" என்ற நம் நாட்டு பக்திப்பாடல் தான் என்றால் மிகையாகாது.

இப்பாடலில் பொருட்சுவை, சொற்சுவை, சந்தங்கள், ஓசை நயம் என்பன மெட்டுக்கு மெருகூட்டும் வகையில் அமைந்துள்ளன. முதலில் மெட்டமைக்கப்பட்டு அதன் பின்னரே பாடல் எழுதப்பட்டது. மெட்டுக்கு பாடல் இயற்றிய பெருமை மலரன்பனுக்குறியது..

இப்பாடல் இலங்கை வானொலியில் ஒரு நாளைக்குப் பலதடைவைகள் ஒலிபரப்பாகியதன் மூலம் நம் நாட்டு மெல்லிசைப் பாடல்கள் வரலாற்றிலே ஒரு திருப்பு முனையினை ஏற்படுத்தியது. தென்னிந்திய சினிமா பாடல்களுக்கு நிகரான பாடல் என்ற ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டையும் பெற்றது.

பாடகர் டி.எம். சௌந்தரராஜன் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு பக்திப் பாடல்கள் சங்கீத நிகழ்ச்சிக்கு வருகை தந்த வேளை, திரு.எச்.எச். விக்ரமசிங்க (மாத்தளை செல்வா) சௌந்தரராஜனுக்கு இவரை அறிமுகம் செய்த போது அவர் இப்பாடலுக்குத் தனது பாராட்டைத் தெரிவித்தாராம்.

இந்நூலாசிரியரின் குறிஞ்சி நிலா ஒலிநாடாவிலுள்ள ஒரு சில பாடல்களையாவது இங்கு குறிப்பிடுவது சிறப்பாகும். "குறிஞ்சி நிலா வாடுதம்மா பிள்ளை மடுவத்திலே - என்ற பாடல் மலையக மக்களின் துயர வாழ்வின் ஓரங்கத்தைப் பிரதிபலிக்கின்றது. ஆதலால் பாடலுக்கான மெட்டும், இசையும் மக்கள் மனதில் பதியும்படி உருவாக வேண்டும்." என்று பாடலை என்னிடம் தந்தார். இயற்றித் தந்த பாடலுக்கு மெட்டமைத்து நான் பாடிய போது நண்பர் மலரன்பன் மெய்மறந்து சில நிமிடங்கள் மௌனமாக இருந்து "உங்கள் மெட்டு எனது பாடலுக்கு மகுடம் வைத்தாற் போல் அமைந்துள்ளது." எனப் பாராட்டினார்.

மற்றுமொறு பாடலான "உச்சிமலை சாரலிலே" என்ற நாட்டார் பாடல் பாணியிலமைந்த பாடல் இயற்றிய பின்னரே மெட்டமைக்கப்பட்டது. இப்பாடலின் சொற்கள், மெட்டு, பின்னணி இசை எல்லாம் மலையக மக்களின் பாரம்பரியத்தைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டுமென்பதற்காக மலரன்பனும் நானும் பல முறை சந்தித்து, சிந்தித்து செயல்பட வேண்டியிருந்தது. கலாசார அமைச்சராக விருந்த திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி அவர்களினால் நியமிக்கப்பட்ட மலையக கலாசார மேம்பாட்டு குழுவில் அங்கம் வகித்த மலரன்பன், தனது பங்களிப்பாக கலாசார குழுவின் முதலாவது கலைவிழா பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றபோது, இப்பாடலுக்கான நடனத்தை தயாரித்து மேடையேற்றிய வேளை அமரர் சௌ. தொண்டமான் அவர்கள் மிகவும் சிலாகித்து பாராட்டியுள்ளார்.

மலரன்பன் தத்துவம், பக்தி, மலையக வாழ்வு, நாட்டார்ப்பாடல், காதல், இயற்கை அழகு, சமாதானம், சோகம் என நவரசங்களையும் பிரதிபலிக்கும் பாடல்களை இயற்றியுள்ளார். இவர் இயற்றி நான் மெட்டமைத்து உருவான பாடல்கள் பல. எனது மெட்டுகளுக்கு இயற்றியவை சில. இப்பாடல்களை இலங்கை வானொலியிலும், தொலைக்காட்சியிலும் நாம் கேட்கலாம் பார்க்கலாம். இந்நூலில் வெளிவந்துள்ள பாடல்கள் நம் நாட்டின் முத்துக்கள்.

கொழும்பு

எம்.எஸ். செல்வராஜா.
இசையமைப்பாளர்

திரைப்படத்துக்கும், தொலைக்காட்சி, வானொலி சேவைகளுக்கும் ஒலிநாடா பலவற்றுக்கும் நெஞ்சம் மறவாத நூற்றுக்கணக்கான இனிய பாடல்களை உருவாக்கி, தென்னிந்திய திரைப்பட பாடல்களுக்கு நிகராக தன்னாலும் இசையமைக்கமுடியும் என நிறுபித்து; நம் நாட்டுப் பாடல்களையும் இரசிகர்கள் விரும்பி கேட்க வழி வகுத்த முன்னோடி சிரேஷ்ட இசையமைப்பாளர்.

சரத் விக்ரம

தமிழகத் திரைப்படத் தயாரிப்பாளரொருவர் நம்நாட்டில் தமிழ்த் திரைப்படமொன்று தயாரிக்கும் நோக்கில் இங்கு வந்து படத்துக்கான இசையமைக்கும் பொறுப்பினை என்னிடம் ஒப்படைத்தார். அத்திரைப்படத்துக்கு நான் அமைத்த மெட்டுக்காக மலரன்பன் இயற்றியதே கலாவதி பாடியுள்ள "சோலையோரம் மாலைநேரம் சல சல நதிக்கரையிலே" என்ற பாடல். திரைப்படத்தில் தமிழகப் பாடகியொருவர் பாடுவதாகத்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திரைப்படத் தயாரிப்பு இடையில் நின்றுவிட இப்பாடலை வானொலிக்கும், ரூபவாஹினிக்கும் உருவாக்கிகொடுத்தேன்.

என்னுடைய சில மெட்டுகளுக்கு மலரன்பன் பாடல்கள் இயற்றியுள்ளார். சில பாடல்கள் அவர் எழுதிய பின்னர் நான் மெட்டமைத்து இசையமைத்திருக்கின்றேன். இப்படி உருவான பல பாடல்கள் வானொலியிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இடம் பெறுகின்றன.

கவிதைக்கும் இசைப்பாடலுக்குமிடையே உள்ள வேற்றுமை என்னவெனில், பாடலென்பது மெட்டுக்கு எழுதுவது; அல்லது மெட்டமைப்பதற்கு ஏற்ற வகையில் பொறுத்தமான சந்தங்களுடன் அமைவதுடன் பாமரமக்களும் புரிந்து இரசிக்கக்கூடிய வகையில் இலகுவான மொழிநடையில் கருத்தாழம் கொண்டதாக எழுதப்படல்வேண்டும். மலரன்பன் இயற்ற நான் உருவாக்கிய பாடல்கள் எனது மேற்கூறிய கருத்துகளை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன என்று நான் நம்புகிறேன்.

கொழும்பு.

சரத் விக்ரம
இசையமைப்பாளர்

இருபத்திஏழு சிங்களத் திரைப்படங்களுக்கும், ஐம்பதுக்கு அதிகமான தொலைக்காட்சி நாடகங்களுக்கும், நூற்றுக்கணக்கான ஒலிநாடாக்களுக்கும் இசையமைத்துள்ள இவரது இசையில் உருவான 'சாவித்திரிகே ராத்திரிய' திரைப்படத்தில் இடம்பெற்ற பிரதீபா தர்மதாச பாடியுள்ள பாட்டுக்கு 1997ம் ஆண்டுக்கான சிறந்த பாடகிக்கான ஜனாதிபதி விருதும், சரசவிய விருதும் கிடைத்துள்ளன. 1998ம் ஆண்டு 'ராஹினி' திரைப்படத்துக்கு சரத்தவிக்ரமவுக்கு சிறந்த இசையமைப்பாளருக்காகவும் சிறந்த பாடகிக்காக நந்தாமாலினிக்கும் ஜனாதிபதி விருது கிடைத்துள்ளது.

எனது பாடல்களைத் தெரிவு செய்து இசையமைத்த இசையமைப்பாளர்கள், பாடகர்கள், பாடகியர்-
இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன இலங்கை வானொலி தமிழ்ச்சேவை-
ரூபவாஹினி கூட்டுத்தாபன தமிழ்ப்பிரிவு-
ஆகியவற்றின் பணிப்பாளர்கள், தயாரிப்பாளர்கள், அறிவிப்பாளர்கள்-
தொலைகாட்சியில் எனது பாடலை அறிமுகஞ்செய்த நிகழ்ச்சி தயாரிப்பாளரும், அறிவிப்பாளருமான திரு.எம்.என். ராஜா-
ஒலிநாடாக்கள் தயாரித்து வெளியிட்ட மாத்தளை இந்து இளைஞர் மன்றத்தினர்-
அவர்களோடு இணைந்து பங்களிப்புச் செய்த திருவாளர்கள் கே.கனகராஜா, வி.மகாதேவன், ஆர்.உமையபாலன்-
மத்திய மாகாண சபை உறுப்பினர் திரு.மு.சிவஞானம்-
கைம்மாறு கருதாமல் சமூக சமய கல்வி கலை கலாசார மேம்பாட்டுக்காக நற்பணிப்புரியும் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அறங்காவலர் சபையினர்-
அறங்காவலர்சபைத் தலைவர் அறநெறிச்செம்மல், அகில இலங்கை சமாதான நீதவான் திரு.த.மாரிமுத்துச் செட்டியார்-
அறங்காவலர்சபை முன்னைநாள் தலைவர் திரு.எஸ்.சந்திரசேகரன்-
எனக்கு சமாதான நீதவான் நியமனம் கிடைத்தபோது பாராட்டு விழா நடாத்திய விபுலானந்த கலா மன்றத்தினர்-
மற்றும் திரு.கே.சண்முகராஜா (சண் அண்ணன்) ஆசிரியர் கவிஞர் தமிழ்ச்செல்வன், திரு.மாயழகு சசிகரன்,
முன்னுரை வழங்கிய கலாநிதி திரு.துரைமனோகரன், பதிப்பாசிரியர் திரு.அந்தனி ஜீவா, திரு.பண்ணாமத்துக்கவிராயர்-
மாத்தளைப் பிரதேசத்தில் நற்பணிப்புரியும் சமய கலை இலக்கிய கலாசார அமைப்புகள்-
ஆகியோருடன் நல்லிதயம் கொண்ட அனைவருக்கும்
எமது நன்றி.

I.S.B.N. 955-9084-11-9

ஆசிரியரின் பிற நூல்கள்

கோடிச்சேலை - **சிறுகதைத்தொகுதி - 1989ம் ஆண்டுக்கான அரச தேசிய சாகித்தியப் பரிசுப்பெற்றது.**

வனவாசம் - **சிறுகதைத்தொகுதி - உக்குவளை ப்ரவாகம் வெளியீடாக வெளிவருகிறது.**

மலரன்பன்

இலங்கையின் சிறந்த எழுத்தாளர்கள் சிலரில் மலரன்பனும் ஒருவர். 1989ம் ஆண்டு இவரது கோடிச்சேலை சிறுகதைத் தொகுதியினை மாத்தளை சிவஞானம் சுஜாதா பிரசுரம் மூலம் வெளியிட்டார்.. ஏற்கனவே இலக்கியப் படைப்புகளுக்காகப் பல பரிசில்களைப் பெற்றிருந்த இவருக்கு கோடிச்சேலை சிறுகதைத் தொகுதிக்கு இலங்கை அரசின் உயர் இலக்கிய விருதான தேசிய சாகித்தியப் பரிசும் இலக்கிய வித்தகர் என்ற பட்டமும் கலாசார அமைச்சு வழங்கியது.

சிங்களத்தில் சில கதைகள் இப்னு அஸூமத்தினால் மொழியாக்கம் செய்யப்பட்டு சஞ்சிகைகளிலும், தொகுதிகளிலும் பிரசுரமாகியுள்ளன.

மலையக கலை இலக்கியப் பேரவையின் விருதும்; சுதந்திர பொன்விழாவில் 'பத்தர கலாவேதியன்கே சங்கமய' வின் சிங்கள எழுத்தாளர்களோடு விருதும், தங்கப்பதக்கமும்; மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சின் இரண்டாயிரமாம் ஆண்டு சாகித்திய விருதும் கிடைத்துள்ளன.

டொமினிக் ஜீவா ஜுலை 1997 மல்லிகை இதழில் இவரது படத்தை அட்டையில் பிரசுரித்து பண்ணாமத்துக்கவிராயரின் குறிப்புகளுடன் வெளியிட்டு கௌரவித்தார்.

1965ம் ஆண்டு முதல் சிறுகதை, குறுநாவல், கவிதை, நாடகம் என பல தளங்களில் முத்திரைப் பதித்துள்ள இவரது 'மூங்கிலில் நாதமும் தென்றலின் கீதமும் உன் புகழ் பாடுதம்மா' என்ற தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் பிரபலமடைந்துள்ள பாடலில் தொடங்கி வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஒலி(ளி)பரப்பாகின்ற பாடல்களில் சில 'மகாவலியே மாநதியே' தொகுதியாக உங்கள் கரங்களில்.

இலக்கியத்துறையில் பன்முக ஆற்றல் கொண்ட கலைஞனாக மலரன்பன் திகழ்கிறார்.

த.பெ. இல.32,
கண்டி,
இலங்கை.

-அந்தனி ஜீவா-
பதிப்பாசிரியர்
மலையக வெளியீட்டகம்

I.S.B.N. 955-9084-11-9

அலங்கார் ஒப்செட் பிரிண்டிங் மாத்தளை. தொலைபேசி : 066-31564